பக்கங்கள் 16

விலை ரூ. 50

புதன் பொய்கை

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 200

புதன்கிழமை 14 ஜூன் 2023

வைகாசி 31 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## கிளிநொச்சியில் 8,000 முன்பள்ளிச் சிறார்களுக்கு போஷாக்குக் குறைபாடு!

கிளிநொச்சி, ஜூன் 14

5 வயதுக்குட்பட்ட 8 ஆயிரம் முன்பள்ளிச் சிறார்கள் போஷாக்குக் குறைவு காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேன தெரிவித்தார். »15

### பூநகரியில் காற்றாலை அமைக்கும் திட்டம்

## அதானியாக மாறிய அமைச்சர்; தடுத்து அடக்கிய எம்.பி.க்கள்!

கிளிநொச்சி, ஜூன் 14.
பூநகரி, கௌதாரிமுனையில் காற்றாலை அமைக்கும் திட்டத்துக்கு அதானி குழுமத்தின் பிரதிநிதி போன்ற தோரணையோடு, அனுமதி வழங்கியே தீருவதென்று அமைச்சர் டக்ளஸ் எடுத்த முடிவு, நாடாளுமன்ற உறுப்பினர்களான »15

## விபத்தில் காயமடைந்தவர் உயிரிழப்பு!

யாழ்., ஜூன் 14
மோட்டார்சைக்கிளில் பயணித்த போது விபத்தில் காயமடைந்த பெண்ணொருவர் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று »14

## "அறிக்கை தாங்கோ! அறிக்கை தாங்கோ"

### ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அமைச்சர் ஓதிய மந்திரம்

கிளிநொச்சி, ஜூன் 14
கிளிநொச்சி மாவட்டத்தில் நிலவும் பல்வேறு பிரச்சினைகள், குறைபாடுகள் தொடர் »14

## எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள அரசு தயார்

ஆனால் தேர்தல் எப்போதெனத் தெரியாது ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

### தொலைத்தொடர்பு கோபுரத்தின்

## மின்பிறப்பாக்கியைத் திருட முற்பட்ட இருவர் கைது!

விரிவுகள்:- பக் - 15 இல்

## மாணவி மீது பாலியல் சீண்டல்; ஆசிரியருக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், ஜூன் 14
தீவகப்பாடசாலை ஒன்றில் கல்விகற்றும் மாணவி ஒருவருக்கு, பாலியல் தொல்லை வழங்கியமைக்காக 42 வயதான ஆசிரியரொருவர் கைதுசெய்யப்பட்டு விளக்க »15

## வவு.பல்கலையில் பகிடிவதை; மாணவர்கள் மீது நடவடிக்கை

வவுனியா, ஜூன் 14
வவுனியா பல்கலைக்கழகத்தில் கடந்த மாதம் 15 ஆம் திகதி மாணவர்கள் சிலர் பகிடிவதையில் ஈடுபட்ட நிலையில், அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று வவுனியா பல்கலைக்கழக துணை »14







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலே அரசாங்கத்தின் இலக்கு

## அரசதரப்பு வட்டாரம் தகவல்

**கொழும்பு, ஜூன் 14**

**ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் எந்தவொரு தேர்தலும் இடம்பெறாது. இந்தத் தேர்தலை இலக்கு வைத்தே அடிப்படை வேலைத்திட்டங்களை ஜனாதிபதி தற்போது முன்னெடுத்து வருகிறாரென அரச தரப்புத் தகவல்கள் கூறுகின்றன என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அடுத்த வருடம் ஒகஸ்ட் மாதத்தின் பின்பே ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்.

ஆனால் , அந்தத் தேர்தலை இலக்கு வைத்து இப்போதே அடிப்படை வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்துள்ளார் என்று அரச தரப்புத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதற்கு முன்னதாக உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் மாகாண சபைத் தேர்தலையும் அரசு நடத்த வேண்டும். ஆயினும் அந்தத் தேர்தல்களை நடத்தப் பணமில்லை என அரசு தெரிவிக்கிறது.

உள்ளூராட்சிசபைத் தேர்தல் காலவரையறை இன்றி ஒத்திப்போட்டுள்ளது. மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் இறுதி முடிவு இல்லை. அந்தவகையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன் எந்தவொரு தேர்தலும் இடம்பெறாது என்பது தெளிவாகின்றது- என்றுள்ளது. (ச-22)

# சிந்தனைச் சுதந்திரத்தை தடுக்க முயல்கிறது அரசு

## உதய கம்மன்பில தெரிவிப்பு



கொழும்பு, ஜூன் 14

ஊடக நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் கண்காணிக்கப்பட வேண்டும். ஆனால் அனுமதிப்பத்திரம் ஊடகங்களை கட்டுப்படுத்தும் ஆயுதமாக மாறக்கூடாது. ஒலிபரப்பு மற்றும் ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டவரைவு தனிமனிதனின் சிந்தனைச் சுதந்திரத்துக்கு எதிரானது.

இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடகங்களுக்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் மாபெரும் வியாபாரமாகக் காணப்படுகிறது. செல்வந்தர்களுக்கு மட்டும் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படுகிறது. ஊடகத் துறையில் சேவையாற்ற நினைக்கும் தரப்பினர் செல்வந்தர்களிடமிருந்து அனுமதிப்பத்திரத்தைப் பெறவேண்டும் என்ற நிலையே தற்போது காணப்படுகிறது.

உத்தேச ஒளிபரப்பு மற்றும் ஒலிபரப்பு ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்டவரைவு ஊடாக ஊடகங்களுக்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் கண்காணிக்கப்பட வேண்டும். அனுமதிப்பத்திர விநியோகத்தில் சிறந்த வழிமுறை பின்பற்றப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறோம்.

இருப்பினும் தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவு அரசமைப்பின் 10 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தனிமனித சுதந்திரத்துக்கு எதிரானது என அப்போதைய பிரதம நீதியரசர் ஜி.பி.எஸ். சில்வா குறிப்பிட்டுள்ளார். ஊடகங்களைக் கண்காணிப்பது வேறு, ஊடக சுதந்திரம் வேறு என அவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதை அவதானத்தில் கொள்ளவேண்டும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பெயரளவு ஜனநாயகவாதி என்பதை பலமுறை சுட்டிக்காட்டியுள்ளோம். தற்போது தயாரிக்கப்பட்டுள்ள ஒலிபரப்பு மற்றும் ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை சட்ட வரைவு தனிமனித சிந்தனை சுதந்திரத்துக்கும் ஊடக சுதந்திரத்துக்கும் எதிரான ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. இந்தச் சட்டவரைவை உயர்நீதிமன்றம் முழுமையாகப் பரிசீலனை செய்யும்-என்றார். (எ-இ)

# ரெலிக்கொம் தனியார்மயமாவதால் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலில்லை!

## ஆஷுமாரசிங்க சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 14

ரெலிக்கொம் நிறுவனத்தைத் தனியாருக்கு வழங்குவது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

ரெலிக்கொம் அதிகாரிகள் சிலரின் கருத்தை அடிப்படையாகக் கொண்டே தேசிய பாதுகாப்புத் தொடர்பான நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழு அறிக்கை சமர்ப்பித்திருக்கின்றது.

இவ்வாறு கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஆஷுமாரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ரெலிக்கொம் நிறுவனம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் தேசிய பாதுகாப்புத் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரையாடப்பட்டது. அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதை நானும் வாசித்தேன்.

அந்த அறிக்கை தொடர்பில் அந்தக் குழுவில் இருக்கும் சில உறுப்பினர்களிடம் வினவியபோது, தங்களுக்கு இதுதொடர்பாக எதுவும் தெரியாது எனத் தெரிவித்தனர். அதனால் இதுதொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவுடன் கலந்துரையாட இருக்கின்றோம்.

இந்த அறிக்கை, ரெலிக்கொம் நிறுவனத்தின் தலைவர் மற்றும் சிலர் தெரிவித்த கருத்துக்களை மட்டும் அடிப்படையாகக்கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் இந்த அறிக்கை தற்போது அவசரப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பில் எமக்குச் சில கேள்விகள் இருக்கின்றன.

சாதாரணமாக நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்க முன்னர், அதை மிகவும் ஆய்வுக்குட்படுத்திப் பல மாதங்களாக அது தொடர்பில் கலந்துரையாடுவோம். அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லை. அதனால் தற்போது அந்தக் குழுவில் இருந்து சில உறுப்பினர்கள் விலகி இருக்கின்றனர்.

இந்த அறிக்கையில் இருக்கும் சில விடயங்கள் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கின்றன. அதேபோன்று தொழில்நுட்ப அடிப்படையில் பார்க்கும்போது அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பது அப்பட்டமான பொய்யாகும். ஏனெனில் தொழில்நுட்ப ரீதியில் அவ்வாறு இருக்க முடியாது. ரெலிக்கொம் தொடர்பாடல் தொடர்பில் நன்கு அறிந்தவன் என்பதுடன் அது தொடர்பில் கற்பித்த பேராசிரியராகவே இவற்றை நான் தெரிவிக்கிறேன்.

உலக நாடுகளின் தொடர்பாடல் நிறுவனங்கள் தனியார் நிறுவனங்களிடமே அதிகம் இருக்கின்றன. ஜப்பானிலும் தொடர்பாடல் நிறுவனம் தனியார் நிறுவனத்திடமே இருக்கிறது. இவர்கள் தெரிவிப்பதுபோல் தேசிய பாதுகாப்புக்கு அது அச்சுறுத்தலாக முடியாது. ஏனெனில் அதற்குத் தேவையான திட்டங்கள் அரசாங்கத்திடம் இருக்கின்றன- என்றார். (எ-இ)

# சப்ரகமுக ஆளுநராக நவீன்

கொழும்பு, ஜூன் 14

சப்ரகமுவ மாகாணத்தின் ஆளுநராக முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னிலையில் அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ ஆளுநராகப் பதவி வகித்த டிக்கிரி கொப்பேகடுவ அண்மையில் தனது பதவியிலிருந்து விலகியிருந்தார். அவரது பதவி விலகலால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு, முன்னாள் அமைச்சர் நவீன் திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். (எ-இ)

# கண்ணை மூடுவதற்கு முன்னர் என் பிள்ளையை விடுவியுங்கள்

## சாந்தனின் தாயார் உருக்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

எனது கண்பார்வையை முழுமையாக இழப்பதற்கு முன் என் மகனை நான் பார்க்க வேண்டும்- சமைத்து உணவூட்ட வேண்டும் . அதற்கு இந்திய நாட்டுப் பிரதமர் கருணைகூர வேண்டும் என சாந்தனின் தாயார் ஊடகங்களுக்குக் கண்ணீர் மல்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு 32 ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்து வந்த சாந்தன் உள்ளிட்டவர்களை கடந்த ஆண்டு இந்திய நீதிமன்றம் விடுதலை செய்தது.



ஆனால் இன்றுவரை அவர்கள் விடுவிக்கப்படாது திருச்சியிலுள்ள சிறப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இந்தநிலையில் சாந்தனின் தாயார், "எனது இறுதிக் காலத்தை எனது மகனுடன் கழிக்கவேண்டும். நான் கண்ணை மூடுவதற்கு முன்னர் என் மகனைக் காண வேண்டும். அதற்கு எனது பிள்ளையை சொந்த நாட்டுக்கு அனுப்பி வைக்க இந்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என உருக்கமாக வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, விடுதலையாகியும் ஓர் அறையில் கைதி போன்று அடைத்து வைக்கப்பட்டுள்ளேன். என்னைச் சொந்தநாடான இலங்கைக்கு அனுப்புமாறு இந்தியப் பிரதமர் மோடிக்கு சாந்தன் கடிதம் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சடுதியாக அதிகரித்துள்ள வீதிவிபத்து மரணங்கள்!

## 4 மாதங்களில் 709 பேர் உயிரிழப்பு!

**கொழும்பு, ஜூன் 14**

**இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் நாடளாவிய ரீதியில் 8 ஆயிரத்து 202 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றுள் 667 வீதி விபத்துக்கள் என்பதுடன் அவற்றில் 709 பேர் உயிரிழந்துள்ளனர். சாரதிகளும், பொதுமக்களும் போக்குவரத்து விதிகளைச் சரியாகக் கடைப்பிடிக்கவேண்டும்.**

இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையை கவனத்தில் கொள்ளும்போது அதிகமானவர்கள் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்களே. வீதி விபத்துக்களில் உயிரிழந்த 709 பேரில் 220 பேர் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் என்பதுடன் மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து பயணித்த 102 பேர் விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்துக்களில் 179 பாதசாரிகள் உயிரிழந்துள்ளனர்.

இந்த உயிரிழப்புகளில் பெரும்பாலானவை மோட்டார்சைக்கிள்களால் ஏற்படுகின்றன. இரண்டாவது அதிக விபத்துக்கள் முச்சக்கரவண்டிகள் மூலம் இடம்பெற்றுள்ளன.

மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் மற்றும் முச்சக்கரவண்டிச் சாரதிகள் வீதியில் வாகனங்களைச் செலுத்தும்போது போக்குவரத்து விதிகளைப் பின்பற்றுவது மிகவும் அவசியமாகும்- என்றார். (எ-இ)

## உயிர்கொல்லி ஹெரோய்ன்; இருவர் மானிப்பாயில் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 14

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவரை மானிப்பாய் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மானிப்பாய் பகுதியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையில் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட 24 வயதான இரு சந்தேகநபர்களிடமிருந்து 40 மில்லி கிராம் மற்றும் 30 மில்லிகிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர்களை மேலதிக விசாரணையின் பின் வழக்குப் பதிவு செய்து மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (ச-125)

## பாண் கட்டளைச் சட்டத்தை நீக்குவதற்கு நடவடிக்கை!

கொழும்பு, ஜூன் 14

சுமார் 159 ஆண்டுகள் பழமைவாய்ந்த பாண் கட்டளைச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 1864 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பாண் கட்டளைச் சட்டமானது, பாண் விற்பனையை ஒழுங்குபடுத்துவதுடன், விற்பனைக்கு வழங்கப்படும் பாணில் கலப்படம் செய்யப்படுவதையும் தடுக்கிறது.

இந்தச் சட்டத்தை நீக்குவது தொடர்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில், வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ சமர்ப்பித்த பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்தது. பாண் கட்டளைச் சட்டம் நுகர்வோர் விவகார அதிகார சபையின் 2003ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் சில விதிமுறைகளுடன் முரண்படுவதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாண் கட்டளைச் சட்டத்தை இரத்துச் செய்வதற்கான சட்டவரைவைத் தயாரிக்குமாறு சட்டவரைஞர்களுக்கு அறிவுறுத்தவும் அமைச்சரவை அனுமதி வழங்கியது. (எ-இ)

## தொழிற்சந்தை

பளை, ஜூன் 14

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகமும், வேலைவாய்ப்புப் பணியகமும் இணைந்து தொழில் தேடும் பிரதேச இளைஞர், யுவதிகளுக்கான தொழிற்சந்தையை நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

சேவைத் துறை, தனியார் மருத்துவமனை, வெளிக்கள அலுவலர் வெற்றிடங்கள், நிதிசார் நிறுவனங்களின் வெற்றிடங்கள், விவசாயத்துறை வெற்றிடங்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் பற்றி ஆலோசனைகள் போன்றவற்றில் காணப்படும் 180 வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகைமையுள்ளவர்களைத் தெரிவு செய்ய வாய்ப்புகள் உள்ளன என்றும் தொழிற் பயிற்சிப் பாடநெறிகள் தொடர்பான விளக்கங்களும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

### மருதங்கேணி விவகாரம்;

## விசாரணைகளுக்கு வருமாறு மேலும் மூவருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் தொடர்பில், விசாரணைக்கு வருமாறு அந்தக் கட்சியைச் சேர்ந்த மூவருக்குப் பொலிஸார் அழைப்பு விடுத்துள்ளனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் தீபன் திலீசன், மகளிர் அணித் தலைவி வாசுகி சுதாகரன், மகளிர் அணிச் செயலாளர் கிருபா கிரிதரன் ஆகியோரை விசாரணைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு இன்று வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-26,66)




இப்பத்தைப் பூனையள், சூடு கண்டாலும் அடுப்பங்கரைக்குப் போய்த்தான் தீருவன் எண்டு திருந்தாமல் அடம்பிடிக்குதுகள். அப்பிடியொரு கள்ளப்பூனையொண்டு தீவகப் பள்ளிக்கூடத்தில மாட்டுப்பட்டிருக்கு. அந்தச் செய்தியை இண்டைக்கு முன்பக்கத்தில பார்த்திருப்பியள். செய்தியில எல்லாப் பொட்டுக்கேடுகளையும் எழுதேலாது எண்டாதால, அந்த வாத்திப்பூனை பற்றி பட்சி சொல்றதுதான் சரியாயிருக்கும்.

கொஞ்சக் காலத்துக்கு முதல் வலிகாமம் பகுதியில இருக்கிற கல்லூரி ஒண்டில இந்த வாத்தியார் படிப்பிச்சவர். அப்ப அவரில ஒரு முறைப்பாடு. அங்க படிக்கிற பொம்பிளைப் பிள்ளையள் சிலரை இந்த வாத்தியார் சீரழிச்சுப் போட்டார் எண்டதுதான் அந்த முறைப்பாடு. நாலைஞ்சு பிள்ளையள் பாதிக்கப்பட்டிருந்தாலும், மூண்டு பிள்ளையள் தான் வாத்தியாருக்கு எதிராத் துணிஞ்சு சாட்சி சொல்ல வந்ததுகள். அந்த முறைப்பாட்டை வைச்சு, வாத்தியைப் பிடிச்சு ஜெயிலுக்கையும் பொலிஸ் போட்டது. அந்த வழக்கு மேல்நீதிமன்றத்தில நடக்கேக்க, சாட்சி சொல்லவேண்டிய பிள்ளையள் நீதிமன்றத்துக்கு வராமல் விட்டிட்டுதுகள். 'கோர்ட்ஸூக்குப் போய் அங்க கூண்டில ஏறி எல்லாருக்கும் முன்னால பள்ளிக்கூடத்தில வாத்தியார் செய்ததையெல்லாம் சொன்னால், பிறகு வாழ்க்கை அவ்வளவுதான்' எண்டு அந்தப் பிள்ளையளை எல்லாரும் பயப்பிடுத்தினதாலதான் முறைப்பாடு குடுத்த பிள்ளையள் சாட்சி சொல்லப்போகமால் நிண்டவை. அப்பிடி அவை சாட்சி சொல்லாதது இந்த வாத்தியாருக்குச் சாதகமாப் போட்டுது. சாட்சியள் இல்லையெண்டதுக்காக அவரை நீதிமன்றம் விடுதலை செய்திட்டுது.

அவர் இப்பிடி பிள்ளையளைச் சீரழிச்ச குற்றச்சாட்டு வந்தவுடனேயே, அவரை வேலையில இருந்து இடைநிறுத்தி வைச்சிருந்தவை. ஆனால் தீர்ப்பு அவருக்குச் சாதகமாக வந்ததால திரும்பவும் அதே வாத்தியார் வேலைக்கு அவர் வந்திட்டார். ஆனாலும் முந்தின பள்ளிக்கூடத்தில அவரைப் படிப்பிக்க விடாமல் தீவுப்பக்கமுள்ள பள்ளிக்கூடத்துக்குத்தான் விட்டவை. முதல் முறை இப்பிடி கையும் களவுமாப் பிடிபட்டு, ஏதோ சாட்சி சொல்ல பிள்ளையள் வராததால அரும்பொட்டில தப்பின வாத்தியார் அதுக்குப் பிறகாவது திருந்தி நடந்திருக்கோனும், ஆனாலும் பழைய குருடி கதவைத் திறந்தமாதிரி, புதுப்பள்ளிக்கூடத்திலயும் சின்னப்பிள்ளையளில கைவைக்க வெளிக்கிட்டு, இப்ப திரும்ப மாட்டுப்பட்டிருக்கிறாராம். ஆனால், 'அந்த வாத்தியாரை அந்தப் பள்ளிக்கூடத்தில இருந்து தூக்கத்தான் இப்பிடி ஒரு குற்றச்சாட்டை பிளான் பண்ணிச் சுமத்தி இருக்கினம்' எண்டும் இன்னொரு தரப்புச் சொல்லுது.

எல்லாம் அந்தச் சிவனுக்குத் தான் வெளிச்சம்.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் - பௌத்த வரலாற்றை ஏற்பது தீர்வுக்கான சாவி!

## மனோ கணேசன் எம்.பி. ரணிலுக்குப் பாராட்டு

**கொழும்பு, ஜூன் 14**

**முதன்முறையாக நாட்டின் தலைவர் இலங்கைத் தீவின் 'தமிழ் பௌத்த வரலாற்றை' பகிரங்கமாக ஏற்றுக்கொண்டுள்ளார். இலங்கையின் வரலாற்றில் தமிழ் - பௌத்த வரலாற்றுக்கு உரிய இடத்தை ஏற்றால், அது இன்று நாம் எதிர்கொள்ளும் அநேக பிரச்சினைகளுக்குத் தீர்வு தரும் சாவியாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நான் பாராட்டுகிறேன்.**

இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழரசுக் கட்சியினருடனான கலந்துரையாடலின்போது தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில பணிப்புரைகளை விடுத்துள்ளார். இலங்கைத் தீவின் "தமிழ் - பௌத்த வரலாற்றை" பகிரங்கமாக ஏற்றுக்கொண்டு, ரணில் விக்கிரமசிங்க கருத்து கூறியுள்ளார். இப்படி ஒரு தமிழ் பௌத்த வரலாறு இருப்பதை சிங்களத் தீவிரர்கள் எப்போதும் மறைக்க விரும்புகிறார்கள். விஜயன் வந்திறங்கிய கதை பொய்யென்று என்னைத் தேடி வந்து வண. பிக்கு ஞானசாரர் சொன்னது போன்றும், இளவரசன் விஜயன் வரவை நினைவுகூர்ந்து, இலங்கை அஞ்சல் திணைக்களம் முத்திரை வெளியிட்டு, பின்னர் அதை இரண்டு வருடங்களில் மீளப் பெற்றதைப் போன்றும், வெறும் கைகளால் சூரியனை மறைப்பதைப் போன்றும், வரலாற்றில் தமிழர்களுக்கு உரிய இடத்தை இவர்கள் எப்போதும் மறைக்க முயன்று வருகிறார்கள். தமிழ்- பௌத்த வரலாறு அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டால், இன்று நாம் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் என்ற பூட்டுக்கு அது சாவியாக அமையும் என நான் நம்புகிறேன். இந்தநோக்கில், 2018ஆம் ஆண்டு நான் அமைச்சராக இருந்தபோது ஒரு காரியம் செய்தேன்.

பிரபல சிங்கள வரலாற்றாசிரியர், சினிமா எழுத்தாளர் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன, இலங்கையின் தமிழ்- பௌத்த வரலாற்றை பற்றி சான்றுகளுடன் எழுதிய, "தமிழ் பௌத்தன்" (தமிழ் - பௌத்தயா) சிங்கள நூல் நாட்டில் பாவனையில் இல்லாமல் இருந்தது. அந்த நூலை தேடிப் பிடித்து, பேசி, பேராசிரியரின் அனுமதியைப் பெற்று அதை எனது அமைச்சின் செலவில் மறுபிரசுரம் செய்து, நாட்டின் சிங்களப் பாடசாலைகளுக்கும், விகாரைகளுக்கும் இலவசமாக அனுப்பி வைத்தேன்.

அதன்பின் பேராசிரியர் ஆரியரத்னவை அழைத்து சில வண. பிக்குகள் கண்டித்துள்ளார்கள் என அறிந்தேன். என்னுடன் முரண்பட எவரும் வரவில்லை. இப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை போட்டு கிழிப்பார்களோ தெரியவில்லை. அவரை அந்த கௌதம புத்தனும், கதிர்காமக் கந்தனும் காப்பாற்றட்டும்- என்றுள்ளது. (எ-இ)



# செவ்வழி நயன நட்பெழுச்சிக் கூடல்

யாழ்ப்பாணம், ஜூன் 14

நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டு கலைக்கூடலின் மாதாந்த செவ்வழி நயன நட்பெழுச்சி ஒன்றுகூடல் நல்லூர் மகேஸ்வரன் மணிமண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

சைவசமயத் தமிழ் பண்பாட்டு விழுமியங்களையும், கலாசாரக் கோட்பாடுகளையும் எதிர்காலச் சந்ததியினருக்கு கடத்தும் வகையில் நிகழ்ச்சி ஒழுங்கமைக்கப்பட்டது. நிகழ்வில் மாலைகட்டுதல், கோலம்போடுதல், விவாத மேடைகள், சமயச் சுற்றுலா, தோரணம்கட்டுதல், வித்தியாசமான பிரசாத வகைகள் தயாரித்தல் உள்ளிட்ட போட்டிகள் இடம்பெற்றன. அதிகளவான சைவசமயத்தவர்கள் வயது வேறுபாடின்றி நிகழ்வில் பங்கேற்றனர். (ச-27)

# நெளுக்குளத்தில் மாடு கடத்தல்: பொலிஸார் நடவடிக்கையில்லை

## வவு. ஒருங்கிணைப்புக் குழுவில் ஆராய்வு

வவுனியா, ஜூன் 14

வவுனியா, நெளுக்குளம் பகுதியில் அதிகளவாக மாடுகள் கடத்திச் செல்லப்படுகின்றமை தொடர்பில் நெளுக்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி அக்கறையின்றிச் செயற்படுகிறார் எனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றபோது இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. இதன்போது ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர், குறித்த பகுதியில் அதிகளவாக மாடுகள் கடத்திச் செல்லப்படுகின்றன என முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாடுகள் கடத்தல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்காமையால் பொதுமக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். அவரை இடமாற்றி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.

அதற்குப் பதிலளித்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், மாடுகள் களவாடப்பட்டுள்ளமை தொடர்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இருவரைக் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்தியுள்ளோம். அத்துடன் தொடர்ச்சியான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். நெளுக்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மக்களுக்கு விரோதமாக செயற்பட்டிருப்பின் அதுதொடர்பில் ஒருங்கிணைப்புக்குழு அறிக்கை சமர்ப்பித்தால் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து பரிசீலிக்கப்படும்- என்றார். (ச-110)

# வவுனியாவில் 8 மருந்தகங்கள் இன்னும் பதிவுசெய்யப்படவில்லை

வவுனியா, ஜூன் 14

வவுனியாவில் பதிவு செய்யப்படாத ஐந்து மருந்தகங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் வே.மகேந்திரன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதில் கடந்த கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டது. அதன்போது தனியார் மருந்தகங்களில் பதிவு செய்யப்பட்ட மருந்தாளர்கள் இன்றி மருந்துகள் வழங்கப்படுகின்றமை தொடர்பில் பேசப்பட்டது. அங்கு கருத்துத் தெரிவித்தபோதே பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியாவில் 19 மருந்தகங்கள் உள்ளன. அவற்றில் 8 மருந்தகங்கள் பதிவு செய்யப்படவில்லை. அவற்றில் 5 மருந்தகங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளோம் 3 மருந்தகங்களை பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை எமக்கு வழங்கியுள்ளனர்.

அத்துடன் இரு மொத்த வியாபார மருந்தகங்கள் உள்ள நிலையில், அவற்றில் ஒன்று பதிவு செய்யப்படவில்லை. அதற்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (எ-110)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். உற்சாகமும் பெருக்கெடுக்கும். சிந்தனை மேலோங்கும்.

**இடபம்:** அன்பும் ஆதரவும் கிடைக்கும். தாயாரின் தேவைகளை மகிழ்ச்சி யுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு பண வரவு இருந்தாலும் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். சுபநிகழ்ச்சி ஒன்று ஏற்பாடாகும். சிலருக்கு வீண் அலைச்சலுடன் உடல் அசதியும் ஏற்படக்கூடும். உற்சாகம் பெறுவீர்கள்.

**கடகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். சிரமங்கள் ஏற்படும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபடவேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பணிகளுக்காக சற்று அலைச்சல் ஏற்படும். சிலருக்கு எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** நீண்ட நாள்களாக நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம்.

**துலாம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தை வழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். எதிர்ப்புகள் விலகும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். பராமரிப்புப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள்.

**மகரம்:** ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு திடீர் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகள் சாதகமாக முடியும்.

**கும்பம்:** எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். தேவையான உதவிகளும் கிடைக்கும். வீண் விவாதம் தவிர்க்கவும்.

**மீனம்:** மன உறுதியுடன் செயற்படுவீர்கள். செலவுகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொல்லியல் திணைக்களத்தை ஆட்டுவிப்பது யார்?

தமிழர் பிரதேசங்களில் தொல்லியல் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் பௌத்தமயமாக்கல் நடவடிக்கைகள் தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ளதோடு, அவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கான பணிப்புரைகள் சிலவற்றை விடுத்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. தமிழ்த் தலைவர்களுடனான சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை ஆராய்ந்த ஜனாதிபதி, தொல்லியல் திணைக்களப் பணிப்பாளரைக் கடிந்தும் இருக்கின்றார். இவை தமிழ் மக்களுக்கு ஆறுதலளித்தாலும், இந்தப் பணிப்புரைகள் எந்தளவுக்கு செயல்வடிவம் பெறுகின்றன என்பதைப் பொறுத்திருந்தே பார்க்கவேண்டும். இங்கு ஆழ்ந்து கவனிக்க வேண்டிய இன்னொரு விடயமும் இருக்கின்றது.

தொல்லியல் திணைக்களமானது நாடு முழுவதிலும் உள்ள தொல்லியல் மரபுரிமைகளைப் பாதுகாத்தல், அவற்றைப் பதிவு செய்தல், தொல்லியல் களங்களையும் நினைவுச் சின்னங்களையும் தொல்பொருள்களையும் பேணிப் பாதுகாத்தல் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபடுதல் என்ற நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. நாட்டின் அனைத்து இனங்களினதும் வரலாற்றுத் தொன்மையைப் பேணிப் பாதுகாக்க வேண்டியதே இந்தத் திணைக்களத்தின் முதன்மைப் பணி. ஆனால் அரசாங்கத் திணைக்களமான தொல்லியல் திணைக்களம் தொன்றுதொட்டு நாட்டில் பௌத்த மேலாதிக்கத்தை நிலைநிறுத்த முயலும் திணைக்களமாகவே இயங்குகின்றது. நாட்டின் வரலாற்றை நாட்டின் சிறுபான்மை மக்களின் வரலாறுகளை அழித்து திரிபுபடுத்தி புதிய சிங்கள – பௌத்த வரலாற்றை உருவாக்கும், இலங்கையை சிங்கள – பௌத்த நாடாக உருமாற்றும் செயற்பாடுகள் தொல்லியல் திணைக்களத்தால் பல்லாண்டுகளாக முன்னெடுக்கப்பட்டன, தற்போதும் முன்னெடுக்கப்படுகின்றன. எத்தனையோ அரசாங்கங்கள் ஆட்சிக்கு வந்து சென்றபோதும் கூட தொல்லியல் திணைக்களத்தின் செயற்பாடுகளில் எந்தமாற்றமும் இல்லை. இப்போதும்கூட அந்த நிலைமையே தொடர்கின்றது.

தொல்லியல் திணைக்களத்தால் தமிழ் மக்களின் பூர்வீகப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் இத்தகைய ஆக்கிரமிப்புகள் தொடர்பாக தமிழ்மக்களின் பிரதிநிதிகள் எத்தனையோ தடவைகள் அரசாங்கங்களிடம் முறையிட்டிருக்கின்றார்கள். ஆதாரங்களைச் சமர்ப்பித்திருக்கின்றார்கள். நாட்டின் அதியுயர் பதவிகளில் இருந்தவர்கள் முதல், துறைசார்ந்த அமைச்சர்கள் வரையில் இந்த விடயத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு பணிப்புரைகள் தொல்லியல் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருந்தன. ஆனால் அவை எவற்றையும் கருத்தில் எடுக்காது தொல்லியல் திணைக்களம் தன் ஆக்கிரமிப்புச் செயற்பாட்டை தொடர்ந்தும் முன்னெடுத்தவாறே இருக்கின்றது. அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்த தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர், அரசாங்கத்தின் முடிவை செயற்படுத்துவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்று கூறியிருந்தமையும் இங்கு கவனிக்கத்தக்கது.

அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளை ஓர் அரச திணைக்களத்தால் செயற்படுத்த முடியாதிருக்கின்றது என்றால் அந்தத் திணைக்களம் எந்த மறைகரத்தால் இயக்கப்படுகின்றது என்பதையும் எந்த நிகழ்ச்சி நிரலில் அது செயற்படுகின்றது என்பதையும் கண்டறிவது முக்கியமானது. அதன் கட்டமைப்புகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டியதும் கட்டாயமானது. நாட்டின் இனப்பிரச்சினை நீறுபூத்த நெருப்பாகப் புகைந்து கொண்டிருப்பதற்கு இவ்வாறான மறைகரங்களே பிரதான காரணம். அவை களையெடுக்கப்படாவிட்டால் நாட்டின் முன்னேற்றம் என்பது சாத்தியமில்லை. நாட்டின் முன்னேற்றம் தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க உளமாரச் செயற்படுவாரானால், அவர் முன்னாலுள்ள முதற்பணி இதுவே.

**நாளொரு நல்வார்த்தை**

"பெரும்பாலான மக்கள் தாங்கள் விரும்புவதைத் தேர்ந்தெடுப்பதில்லை; அவர்கள் எதைப் பாதுகாப்பானதாக நினைக்கிறார்களோ அதையே தேர்ந்தெடுக்கிறார்கள்" – ஃபில் மெக்ரா



# இந்த வருடத்துக்குள் தேர்தல் எதுவுமில்லை

### அடித்துக் கூறுகிறது அரசாங்கம்

**கொழும்பு, ஜூன் 14**
**இந்த வருடத்துக்குள் எந்தவொரு தேர்தலும் நடைபெறாது என்பதற்கான சாத்தியமே நிலவுகின்றது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருகின்றனவா? என ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் வீதி அபிவிருத்திகள் இடைநடுவில் உள்ளன. நாடளாவிய ரீதியில் அடையாளம் காணப்பட்டுள்ள சேதமடைந்துள்ள வீதிகளை மக்கள் பயணிக்கக்கூடிய வகையில் புனரமைப்பதற்கு 53 மில்லியன் அமெரிக்க டொலர் அவசியமென மதிப்பிடப்பட்டுள்ளது. வெளிநாட்டுக் கடன் மற்றும் நிதி உதவிகள் மூலமே இவற்றுக்கான பணிகள் இடம்பெறும். கடன் மறுசீரமைப்புச் செய்யப்பட்டு, கடன் மீளச் செலுத்தப்படும் நடைமுறை தெளிவுபடுத்தப்பட்ட பின்னரே எமக்கு நிதி வழங்கப்படும் எனக் கூறப்படுகின்றது.

"டொலர் குட்டி போடாது. பணம் அச்சிடவும் முடியாது. எனவே, கடன் மறுசீரமைப்புத் திட்டம் பற்றி பேச்சு நடத்த ஜனாதிபதி பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளுக்குச் செல்கின்றார். பரிஸ் கிளப் உறுப்பினர்களைச் சந்திப்பார். கடன் மறுசீரமைப்புப் பற்றியே தற்போது முயற்சிக்கப்படுகின்றது. மாறாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த அல்ல. நாடு இயல்புநிலைக்குத் திரும்பிய பின்னர் தேர்தல் நடத்தப்படும். சட்டபூர்வமாகத் தேர்தல் நடத்த வேண்டிய காலப்பகுதியில் அது நடைபெறும்." எனவும் அமைச்சர் பந்துல குணவர்த்தன குறிப்பிட்டார். (எ-44)

# தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டம்; உருவாக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூன் 14
தேர்தல் விசேட ஏற்பாடுகள் சட்டம் என்ற புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதற்கான சட்டவரைவொன்றைத் தயாரிப்பது தொடர்பாக ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்த்தன இந்தத் தகவலைத் தெரிவித்தார். நாடாளுமன்றத் தேர்தல் சட்டம், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கட்டளைச் சட்டம், ஜனாதிபதித் தேர்தலுக்கான விசேட ஏற்பாடுகள் சட்டம் மற்றும் மாகாணசபைத் தேர்தல்கள் சட்டம் ஆகியவற்றில் திருத்தம் செய்வதற்கு கடந்த வருடம் டிசெம்பர் 12ஆம் திகதி அமைச்சரவை தீர்மானித்தது. இருப்பினும் சட்டங்களைத் தனித்தனியாக திருத்துவதற்குப் பதிலாக, புதிய தேர்தல் சட்டத்தை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தார். (எ-இ)

**நாளை** 15.06.2023 வியாழக்கிழமை வைகாசி 32
சுபநேரம் : 07.23 - 08.53
ராகுகாலம் : 01.23 - 02.53
பிரதோஷவிரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லை. மருத்துவமனையில் மருத்துவர்கள் பற்றாக்குறை

## சிரமங்களை எதிர்கொள்ளும் நோயாளர்கள் நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

**முல்லைத்தீவு, ஜூன் 14**

**முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் ஒவ்வொரு துறைக்குமான மருத்துவ நிபுணர்கள், சுகாதார அமைச்சால் அடிக்கடி இடமாற்றம் செய்யப்படுவதனால் மருத்துவர்கள் பற்றாக்குறை தொடர்ச்சியாக நிலவி வருகிறது. இதனால் மருத்துவ சேவையைப் பெறுவதில் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என மருத்துவமனை வட்டாரம் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையிலுள்ள ஒவ்வொரு துறைக்கும் சிறப்பு மருத்துவ நிபுணர்கள் இல்லாத நிலை தொடர்ந்து நிலவி வருகின்றது.

மருத்துவமனைக்கு சத்திரசிகிச்சை நிபுணர்கள் இருவர் தற்காலிகமாக நியமிக்கப்பட்டனர். அவர்களை இடமாற்றம் செய்யும் நடவடிக்கையில் சுகாதார அமைச்சு ஈடுபட்டு வருகின்றமையை அறியமுடிகிறது.

அவ்வப்போது நியமிப்பதும் பின்னர் அவர்களை இடமாற்றம் செய்வது போன்ற நடவடிக்கைகளால் மக்களின் அடிப்படைத் தேவையான மருத்துவத் தேவையைச் சிறந்த முறையில் நிவர்த்திக்கமுடியாத நிலை காணப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டம் முழுவதற்குமான சத்திரசிகிச்சை நிபுணர் சேவைகளை வழங்கும் ஒரேயொரு மருத்துவமனை இதுவே.

இங்கு வெலிஓயா, பதவியா, மல்லாவி, மாங்குளம், புதுக்குடியிருப்பு என பல ஆதார மருத்துவமனைகளிலிருந்து அனுப்பப்படும் அவசர நோயாளர்களுக்கு சத்திரசிகிச்சைகள் இடம்பெறுகின்றன. வார இறுதி நாள்கள் உட்பட முறையான சேவைகளை வழங்க 2 சத்திரசிகிச்சை நிபுணர்களாவது கட்டாயம் தேவை.

மருத்துவமனைக்கு கடந்த காலத்திலோ தற்காலத்திலோ நிரந்தர மருத்துவ நிபுணர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. நிரந்தர மருத்துவர்கள் இன்மையால் நோயாளர்கள் அந்தரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றில், சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு எடுத்துரைத்து மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவ நிபுணர்களை நியமிக்க ஆவன செய்ய வேண்டும். நோயாளர் உயிரைக் காக்க வேண்டும் என மருத்துவமனை வட்டாரம் குறிப்பிட்டுள்ளது. (சு-19)



## ஆனந்தசங்கரிக்கு அகவை 90

கிளிநொச்சி, ஜூன் 14

கிளிநொச்சி மாவட்ட உருவாக்கத்தின் மூலகர்த்தாவும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்றச் செயலாளர் நாயகமுமான வீ.ஆனந்தசங்கரியின் 90 ஆவது பிறந்தநாள் நிகழ்வும், மாவட்ட மக்களின் மதிப்பளிப்பு நிகழ்வும் நாளை வியாழக்கிழமை கிளிநொச்சி, கனகபுரம் நண்பர் விடுதி மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அனைத்துத் தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## மின்கம்பத்துடன் மோதி கனரக வாகனம் விபத்து

கிளிநொச்சி, ஜூன் 14

யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த கனரக வாகனம் ஒன்று ஏ-9 வீதியில் பளை முல்லையடிப் பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்துச் சம்பவம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளது. கனரக வாகனம் மின் கம்பத்துடன் மோதி அருகிலிருந்த வீட்டின் மதில் மேல் விழுந்து விபத்துக்குள்ளாகியது. விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை பளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (சு-113)



## குற்றச்செயல்களில் ஈடுபட்ட மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 14

அச்சுவேலிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் குற்றச்செயல்களில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் மூவரை காங்கேசன்துறை விசேட குற்றத் தடுப்புப் பொலிஸார் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைதுசெய்துள்ளனர்

புத்தூர் கிழக்குப் பகுதியில் 3 லட்சம் லீற்றர் கோடா மற்றும் 7 லீற்றர் கசிப்புடன் 42 வயதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

குப்பிளான் பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞன் 3 கிராம் 950 மில்லிகிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் புத்தூர் நவக்கிரிப் பகுதியில் கைதுசெய்யப்பட்டார்.

அத்துடன் 3 ஆயிரம் லீற்றர் கசிப்புடன் 37 வயதுடைய சந்தேகநபர் அச்சுவேலிப் பகுதியில் கைதுசெய்யப்பட்டார்.

சான்றுப் பொருள்களுடன் சந்தேகநபர்கள் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதையடுத்து சந்தேகநபர்களை சட்ட நடவடிக்கைக்குட்படுத்த அச்சுவேலிப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (சு-23)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜூன் 14

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் -10 ( திருநீலநக்க நாயனார்) சிறுப்பிட்டி அருள்மிகு ஸ்ரீ நாக தம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்குச் சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

சேக்கிழார் பெருமானின் குரு பூசையைத் தொடர்ந்து சொற்பொழிவினை இளம்சைவப்புலவர் க. கைலநாதன் “நீ சிவபாதகம் செய்தவனே என்னைவிட்டு அகல்வாயாக என்ற நாயனார்” என்னும் தொனிப்பொருளில் ஆற்றவுள்ளார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். (ய)

✦ ✦ ✦

தென்மராட்சி, ஜூன் 14

வரணி, கரம்பைக்குறிச்சி கிழக்கு அருள்மிகு சோலைக்கூடல் அண்ணமார் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டுச் சிறப்புச் சொற்பொழிவு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமைவரை தினமும் மாலை 7 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறவுள்ளது.

சொற்பொழிவைச் சைவப்புலவர்கள் சி.கா.கமலநாதன், செ.கந்த. சத்தியதாசன், செ.த. குமரன், இளம்சைவப்புலவர் க. கயிலைவாசன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படும். (ய)

## ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 14

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50 ஆவது ஆண்டை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும், மாதாந்த ஆய்வரங்குத் தொடரின் 5 ஆவது நிகழ்வு, “மக்கள் கலை இலக்கிய முன்னோக்கில் ஈழத் தமிழ் சிறுகதைகள்” என்ற தலைப்பில் எதிர்வரும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், எழுத்தாளரும், விமர்சகருமான இ. இராஜேஷ்கண்ணன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த ஆய்வரங்கில், ஆய்வுரையை ஆய்வாளரும் ஆசிரியருமான சி.ரமேஷ் ஆற்றவுள்ளார். தொடர்ந்து சபையோரின் கருத்துரைகளுடன் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. (ய)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை



"தானம் தவம்இரண்டும் தங்கா வியன்உலகம்
வானம் வழங்கா தெனின்." -வள்ளுவர்

## பெண்ணியமும் அதன் இயங்கு நிலையும்

■ உடுவிலூர் கலா



தாய் வழி மரபு, தந்தை மரபு வழி மரபாய் மாற்றம் பெற்று அன்றுதொட்டு இன்று வரை பெண்ணை இரண்டாம் உயிரியாகப் பார்க்கும் சமூகத்தின் தனி மனிதனின் பார்வை மாறுபடவில்லை. பெண்ணியம் என்பது பெண்ணை ஓர் ஆய்வுப் பொருளாகப் பார்க்கும் கோட்பாடுகள் ஆகும். பெண்ணின் வாழ்வியல் சிக்கல்கள், அடக்கு முறைகள், புறக்கணிப்புகள், அவளின் கண்ணீர் என்பவற்றைக் கண்டும் கேட்டும் அதனை ஆய்வுக்குட்படுத்திப் பார்க்கிறது பெண்ணியம்.

'பெண்ணியம்' கி.பி. 19ஆம் நூற்றாண்டில் முதன் முதலில் பெரியளவில் பேசு பொருளானது. 18ஆம் நூற்றாண்டு முழுதும் பரவலாக பெண்ணியச் சிந்தனை எழுச்சிபெற்ற போதும் இது ஒரு தனிக் கோட்பாடாக 19ஆம் நூற்றாண்டிலேயே வலுப்பெற்றது.

**பெண்ணியத்தின் வேர்**

ஆணாதிக்க வெறியர்களை எதிர்த்தும், பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு எதிராகவும் எழுந்த குரல்களையே "பெண்ணியத்தின் " வேர் என்பர். இதிலிருந்து தான் பெண்ணியம் ஒரு தனிக் கோட்பாடாக மலர்ந்தது. 'பெமினிசம்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு பெண் விடுதலை அமைப்புகள் 'பெண்ணிலை வாதம்' என்று சமூகவியல் நோக்கிலும், கல்வியியலாளர்கள் 'பெண்ணியம்' என்றும் அர்த்தம் கொள்கின்றனர். ஆக பெண்ணிலை வாதம் பெண்களை விவாத நோக்கிலும், பெண்ணியம் அவர்களை ஆய்வு நோக்கிலும் பார்க்கிறது. பெண்களின் இந்தச் சமூக நிலையானது அவர்களை விவாத நோக்கிலும், ஆய்வு நோக்கிலும் நோக்க வைத்துள்ளது என்பதே உண்மை.

பெண்ணியம் என்னும் கோட்பாடானது, அவளின் அடிமைத் தளையை அறுத்து பழமைக்குள் புதையுண்டு போன வாழ்வியலில் இருந்து மீட்டு, நாகரிக மயமாக்கும் சிந்தனையின் எழுச்சி என்று சொல்வதே சாலச் சிறந்தது.

**பெண்ணியத்தின் பார்வை**

அவளின் சமூக நிலையை ஆராய்ந்து தாய்வழி தந்தை வழியாக மாறியதை, உண்மையுடன் ஆதாரத்துடன் செப்புகிறது.

பெண்களை இரண்டாம் தர நிலையில் இருந்து நீக்கி அவளை ஓர் உயிரியாக தனி மனிதனும் சமூகமும் அங்கீகரிக்கச் செய்வது.

ஆணைப் போலவே பெண்ணுக்கும் சமமான உரிமையும் சுதந்திரமும் கொடுக்கத் தூண்டுவது.

பெண்கள் மீதான மத பொருளாதார பண்பாட்டு தொடர்பான அவளின் அக மற்றும் புறநிலைகளை ஆராய்வது.

பெண்ணின் அவலங்கள் அதற்கான தீர்வுகள் பற்றி ஆராய்வது.

பெண்களின் அடிமை நிலையை அவர்களே உணரச் செய்வது. அதிலிருந்து மீள்வதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது.

உலக வெளியில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை அந்தந்த மண் சார்ந்து நோக்குவது

பெண்கள் மீதான ஆண்களின் அத்துமீறல்களை அரங்கினில் வெளிப்படுத்துதல் எனப் பலதரப்பட்ட அவள் சார்ந்த பார்வைகளோடு பெண்ணியம் உயிர்ப்புக் கொள்கிறது.

ஆய்வு விவாதம் என்ற இரு நிலையில் பெண்ணியம் இயங்குகின்ற போதும் இத்தனை வருடங்கள் கழிந்தும் பெண் கண்ணீர் சிந்தாமல் இருக்கின்றாளா, பாலியல் வன்முறைகள் இடம்பெறவில்லையா? பெண் சுயத்தோடு வாழ்கின்றாளா? என்பதற்குப் பதிலும் கண்ணீரே. நூற்றாண்டுகள் கடந்தும் பேசப்படும் பெண்ணியம் பெண்களின் கண்ணீர் துடைக்கும் கரங்களாக அவளுக்கு வழிகாட்டும் வழிகாட்டியாக மாற வேண்டும். வெறுமனே பேச்சளவில் பேசுபொருளாக இருப்பதை விடுத்து அவளின் சுயத்தைப் பாதுகாக்க வேண்டும்.

**நிழல்கொடுக்காத பெண்ணியக் குரல்**

18ஆம் நூற்றாண்டில் விதை போட்டு முளைத்து, 21ஆம் நூற்றாண்டில் கால்பதித்து பெரு விருட்சமாக நிற்கும் பெண்ணியம் நிழல் கொடுக்க வேண்டும். இதன் சாதனை பற்றிக் கொஞ்சம் சிந்திக்க வேண்டிய தருணம் இது. எனினும், அன்றைய காலத்தை விடப் பெண்களின் அனுபவிக்கும் அவலங்கள் இன்றும் ஏராளம் ஏராளம்.

தன்னை மறந்து, தன் நாமம் கெட்டு, தன் மதம் மறந்து அவனேகதி என்று வாழ்ந்தும் அழுகிறாள் பெண், கருவைச் சுமந்தும் களைப்போடும் மாடாக வேலை செய்கிறாள், குடும்ப வருமானத்துக்காகப் பாடுபட்டும், மதுபோதைக் கதைகளின் வார்த்தைகளால் வசைமாலை சூடுகிறாள், ஊருக்காக, சமூகத்துக்காக எதுவும் செய்யாத, செய்யவிரும்பாதவனை கணவன் என்று சொல்லிப் போலி வாழ்க்கை வாழ்கிறாள், பெற்று வளர்த்தவளை மறந்து யாரோ ஒருவனுக்காகத் தன் சுயம் இழக்கிறாள்.

இந்தப் பட்டியல் மிகமிக நீட்சியானது. ஏனிந்த அவலம்? எழுதா விதிகளுக்குள் அடங்கி வாழ்வது ஏன்? கற்றுவிட்டால் போதாது. கல்வி அறிவின் மூலம் அடிமைத்தளையை அறுக்கவேண்டும். ஆணுக்கு பெண் அடிமை இல்லை. ஆணைப்போலவே பெண்ணும் அவயவங்களோடு பிறந்தவள். இந்த உலகைப் படைக்க இனத்தை விருத்தி செய்ய அங்கங்களில் வேறுபாடு. இதைத் தவிர சொல்வதற்கு எதுவுமில்லை.

பெண் பெண்ணாக வாழவேண்டும். பராமரிக்கவும் பாதுகாக்கவும் அன்பு காட்டவும் என்ற நிலைமாறி அவளைப் பாதுகாக்கப் பெண்ணியம் முன்வர வேண்டும். என் விழிநீரைத் துடைக்க என் கரங்கள் போதும். அதேபோல் பெண்களின் துயர்துடைக்கப் பெண்ணியம் போதும். பெண்களின் கண்ணீர் கண்டு உருவான பெண்ணியம் நூற்றாண்டுகள் கடந்தும் தீர்வின்றி இருப்பது கொடுமை. பெண்ணைப் பற்றிய அதியுயர் நோக்கங்களோடு இயங்கும் பெண்ணியம், நடைமுறைச் செயற்பாடுகளில் தீவிரம் காட்ட வேண்டும். பெண்களை அழகு எனப் பார்க்கும் சமூகத்தில் அவளை அறிவுடையோளாகவும் காட்டவேண்டும். ஆண், பெண்ணை அடக்கமுயல்வது மூடத்தனம்.

பெண்ணுக்கு கற்பை இறுக்கமாகப் போதிக்கும் ஆணாதிக்க சமுதாயம், முதலில் ஆணுக்குக் கற்பைப் போதிக்கவேண்டும். குடும்பக் கட்டமைப்புக்களில் பெண்களின் உணர்வுகள் மதிக்கப்படவேண்டும். பெண்மீதான ஆணாதிக்க மரபுகள், அடக்குமுறைகள் தப்பிப்பிராயங்கள் என்பன மாற்றம்பெறவேண்டும். சிறுமிகளின் குழந்தைப் பருவம் மதிக்கப்படவேண்டும். பல் விழுந்த பாட்டிக்கும் பாதுகாப்பு வேண்டும். சட்டவிரோதக் கருவறல், சட்டவிரோதக் கருக்கலைப்பு என்பன இல்லாதொழிக்கவேண்டும். கட்டவிழ்த்து விடப்படும் பாலியல் வன்முறைகள் மனதால் கட்டுப்படவேண்டும். இப்படியே தொடர்ந்தால் அடுத்த சந்ததிக்கும் பெண் அடிமையைக் கையளிப்பதா? என்கிற கேள்வியை ஒவ்வொரு பெண்ணும் தன்னைத் தானே கேட்க பெண்ணியம் தூண்டுகோலாகவேண்டும். இதற்கு ஒவ்வொரு பெண்களும் முதலில் தம்மைத் தயாராக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூகோள மாற்றத்தின் விளைவாக அழிவடையும் ஆழ் ஆழி நீரோட்டம்

மருத்துவர் சி.யமுனாநந்தா



அந்தாட்டிக்கா கண்டத்தில் உள்ள பனிப்பாறைகளின் உருகலானது உலகின் சமுத்திரச் சாகியத்தில் பாதகமான மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. ஆழ்சமுத்திர நீரோட்டமானது உலகின் சூழல் நேயத்துக்கு இயற்கையான கொடையாகும். சாதாரணமாக அந்தாட்டிக்கா பகுதியில் குளிரான உப்பு நீரானது கடலுக்கு அடியில் 4 ஆயிரம் மீற்றர் ஆழத்துக்குக் கீழாகத் தினமும் அதன் அதிக அடர்த்தி காரணமாகச் செல்கின்றது. இவ்வாறு ஆழ் சமுத்திரத்துக்குள் கடல்மேல் மட்டத்திலிருந்து செல்லும் கடல் நீரானது அடர்த்தி கூடியதாகவும், ஒட்சிசன் செறிவு கூடியதாகவும் ஆழ்கடலில் உள்ள உயிரினங்களுக்குத் தேவையான போஷாக்கு நிறைந்ததாகவும் வெப்பசக்தி உடையதாகவும் உள்ளது. இதுவே இயற்கையின் நியதி. இவ்வாறான ஆழ்கடல் நீரானது ஆழ்கடல் நீரோட்டத்தின் மூலம் பூமியின் சகல சமுத்திரங்களிலும் சுற்றிச் செல்கின்றது. இவை பூகோளச் சமுத்திரத்தில் வெப்பம், ஒட்சிசன், போசனைப் பொருள்கள் என்பன சீராக விரவிச் செல்ல உதவுகின்றன.

வடக்கு நோக்கிச் செல்லும் சமுத்திர ஆழிநீரோட்டங்கள் இந்து சமுத்திரம், பசுபிக் சமுத்திரம், அத்திலாந்திக் சமுத்திரம் என்பனவற்றிற்கான கடல் சாகியத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. அதாவது கடலில் வாழும் உயிரினங்களினது போஷாக்கு, வெப்பம், ஒட்சிசன் என்பவற்றை வழங்குகின்றன. இதேபோன்ற செயன்முறைகளே வட அரைக்கோளத்தில் கிறீன்லாந்துப் பகுதியிலும் நடைபெறுகின்றது. ஒரு தாயின் கருப்பைக் கோளத்தில் இருந்து சிசுவுக்கு எவ்வாறு போஷாக்கு, ஒட்சிசன், வெப்பம் என்பன கிடைக்கின்றனவோ அவ்வாறே தான் புவி மாதாவின் கோளத்தில் சமுத்திர ஆழி நீரோட்டம் அதன் புதல்வர்களைக் காப்பாற்றி வளர்க்கின்றது. துரதிஷ்டவசமாக அந்தாட்டிக்காக் கண்டத்தின் சில இடங்களில் ஏற்படும் மாற்றங்கள் உலகின் சகல சமுத்திர சாகியத்தையும் பாதிக்கும். மேலும் பூமியில் ஏற்படும் காலநிலை மாற்றத்திலும் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது. தாயின் உதிரத்தில் உள்ள சிசுவுக்கு எவ்வாறு போஷாக்கு வழங்கல், ஒட்சிசன் வழங்கல், வெப்பநிலை வழங்கல் பாதிக்கப்பட்டு அந்தத் சிசுவின் வளர்ச்சி பாதிக்கப்படுகின்றதோ அல்லது அந்தச் சிசு அழிகின்றதோ அவ்வாறே புவிமாதாவின் பூகோளத்தில் ஏற்படும் பாதகமான தாக்கங்கள் அங்குள்ள சகல உயிர்களையும் பாதிக்கின்றது. இதில் மனிதர்களும் அடங்குவர்.

## பூமி வெப்பமாதலால் ஆழி நீரோட்டம் பாதிப்பு

அண்மைக்காலங்களில் புவி வெப்பமடைதல் மிகவும் வேகமாக நிகழுகின்றது. பசுமைநேயச் செயற்பாடுகள் ஆர்வமற்று அருகிச் செல்கின்றது. இதன் தாக்கத்தால் அந்தாட்டிகா கண்டத்தில் பனிப்பாறைகள் மிகவும் வேகமாக உருகுகின்றன. இவ்வாறு மிகவும் அதிகரித்த பனிப்பாறைகளின் உருகலானது அடர்த்தி குறைந்த, உப்புச்செறிவு குறைந்த, ஒட்சிசன் குறைந்த, போஷாக்கு குறைந்த கடல்நீரின் ஆழ்கடலுக்கு மெதுவாகச் செல்கிறது அதாவது அடர்த்தி குறைந்த கடல்நீர் கடலின் ஆழத்துக்குச் செல்லும் வேகம் அடர்த்தி கூடிய கடல்நீர் கடலின் ஆழத்துக்குச் செல்லும் வேகத்திலும் குறைவானது. பனிப்பாறைகளின் உருகும் வீதம் அதிகரிக்க, இயற்கையாகக் கடலின் ஆழத்துக்குச் செல்லும் போஷாக்கு நிறைந்த, ஒட்சிசன் நிறைந்த, வெப்பமிக்க கடல்நீரின் அளவு குறைக்கப்பட்டு இதனால் சமுத்திரஆழி பூகோள நீரோட்டம் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. அதிகரித்த கைத்தொழில் கழிவுகள், பூகோள வெப்பமாதலை அதிகரித்து, சமுத்திர ஆழியின் இயற்கையான பூகோள நீரோட்டத்தைப் பாதிக்கின்றன. சமுத்திர ஆழிகளே பூகோளத்தில் நிகழும் காபன் வெளியேற்றலைக் கட்டுப்படுத்துகின்றது. ஆனால் தற்போது நிகழும் கட்டுப்பாடற்ற கைத்தொழிற் செயற்பாடுகள் இதே வேகத்தில் தொடர்ந்தும் நிகழ்ந்தால் அடுத்த 30 வருடங்களில் அந்தாட்டிக்கா கண்டத்தில் நிகழும் சமுத்திர ஆழி நீரோட்டம் 40 வீதத்தினால் குறைவடையும் என விஞ்ஞானிகள் தற்போது எதிர்வுகூறி உள்ளனர். இவ்வாராய்ச்சிகள் உலகளாவிய ரீதியில் நிகழக்கூடிய பெரும் சூழலியல் அனர்த்தத்தினை கட்டியம் கூறி உள்ளன.

அதாவது அந்தாட்டிக்காக் கண்டத்தின் இயற்கையான சமுத்திர ஆழிச்சுற்றோட்டம் பாதிக்கப்படுவதனால் அதாவது காலநிலை மாற்ற வெப்பநிலை அதிகரிப்பு. ஆர்முடுகுவதலால் பனிக்கட்டிகள் உருகும் வேகமும் ஆர்முடுகி இயற்கையான சமுத்திர நீரோட்டம் அமர்முடுகலைச் சந்திக்கின்றது. அதாவது தென்துருவ ஆழ்கடல் நீரோட்டத்தில் ஏற்படும் பாதிப்புகள் உலகளாவியரீதியில் காலநிலை மாற்றத்தில் மென்மேலும் பாதிப்புக்களை ஏற்படுத்தும். பருவ மழைவீழ்ச்சியில் மாற்றங்கள் ஏற்படும். சூறாவளி, புயல் என்பவற்றில் மாற்றங்கள் ஏற்படும். சோலைவனங்கள் பாலைவனங்களாக மாறும். பாலைவனங்கள் சோலை வனங்களாக மாறும். விவசாயத்தில் எதிர்பாராத வரட்சி, அழிவு, வெள்ளப்பெருக்கு அழிவு ஏற்படும். உலகில் பட்டினிவீதம் மென்மேலும் அதிகரிக்கும். தொற்றுநோய்களின் எண்ணிக்கையும், தொற்றா நோய்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். மக்களின் சராசரி ஆயுள்காலம் குறைவடையும்.

தென்துருவ பனிக்கட்டி உருகும் வேகம் ஆர்முடுகலில் உள்ளபோது ஆழ்கடல் நீரோட்டம் குறைக்கப்பட்டு சமுத்திர மேல்மட்ட நீரோட்டம் அதிகரிக்கும். கடல்மட்டம் அதிகரிக்கும். கடல்வாழ் உயிரினச் சாகித்தியத்தின் பல்வகைத்தன்மை பாதிக்கப்படும். இந்து சமுத்திரத்தில் இலங்கையின் இட் அமைவு அரேபியக்கல், வங்காள விரிகுடா, பாக்குநீரிணை என்பவற்றின் கடல் நீரோட்டங்களில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும். இவை காலநிலை மாற்றங்களை அதிகரிப்பதுடன் இப்பகுதியிலுள்ள மீனவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கும்.

## ஆள்மட்ட நீரோட்டம் நின்றுவிடும் சாத்தியம்

தற்போதைய சூழல்நேயமற்ற பூகோள வெப்பமடைதலை அதிகரிக்கும். செயற்பாடுகள் அவ்வாறே தொடருமாக இருப்பின் சமுத்திர ஆய்வு விஞ்ஞானிகளின் எதிர்வு கூறல்களின்படி 2050ஆம் ஆண்டளவில் ஆழ்கடலில் 4 ஆயிரம் மீற்றர் ஆழத்தில் நிகழும் சமுத்திர நீரோட்டம் நின்றுவிடுவதற்கான சாத்தியங்கள் அதிகம் உண்டு. இதனால் ஆழ்கடல்வாழ் உயிரினங்களுக்கு அத்தியாவசியமான போஷாக்குகள், ஒட்சிசன், வெப்பம் என்பன இயற்கையாக வழங்கல் நின்று போகும் அபாயம் உள்ளது. இதனால் ஒட்டுமொத்த சமுத்திர சாகித்தியத்தின் இயற்கை அழிக்கப்படும். இது கடலின் மேற்பரப்பிற்கும் படிப்படியாகப் பாதிப்பினை ஏற்படுத்தும். மேலும் கடல்நீர்மட்ட அதிகரிப்பு, பூகோள வாழ்விடங்களில் மாற்றத்தை ஏற்படுத்தும். நிலக்கீழ் நீர் உவர்நீர் ஆதல், சுத்தமான குடிநீருக்கு பற்றாக்குறை என்பன அதிகரிக்கும். பூகோள வெப்பமாதல் அதிகரிப்பு, தென்துருவ பனிக்கட்டிகள் உருகும் வீதம் அதிகரிப்பினை ஏற்படுத்துகின்றது. பனிக்கட்டியினைச் சூழ அதிகரித்த உருகிய வெப்பமான நீர் உள்ளபோது மென்மேலும் பனிக்கட்டிகள் உருகுகின்றன. பூகோள வெப்பமாதலையும், உலக காலநிலை மாற்றத்தையும் சமுத்திர ஆழி நீரோட்டம் குறைக்கின்றது. பூமியில் காலநிலை மாற்றத்தைத் தாங்க அதிக அளவு காபனையும், அதிக அளவு வெப்பத்தையும் ஆழ்சமுத்திரமே ஏற்றுக் கொள்கிறது. ஆனால் பூகோள ஆழி நீரோட்டம் குறைவடைதல், பூகோள வெப்பமாதல் அதிகரித்தல், உருகிய பனிக்கட்டி நீரால் மேலும் அதிக அளவில் பனிக்கட்டிகள் உருகல் என்பன உலகின் சூழலியல் சமநிலையினை காலத்துடன் அதிகரிக்கும் ஆர்முடுகலில் பாதிக்கின்றது.

எனவே இது தொடர்பாக மானிட சமுதாயம் முதன்மை விழிப்புக் கொள்வதற்கான காலம் இதுவாகும். உலகில் சூழல் வெப்பமடைதலை இயற்கையாக சமுத்திரங்களே தாங்கிக் கொள்கின்றன. அண்மைக்காலத்தில் பச்சைவாயு விளைவாக ஏற்பட்ட வெப்பநிலை அதிகரிப்பில் 90 வீதத்தினை சமுத்திரங்களே தாங்கிக் கொண்டன. இவ்வெப்பம் சாகரத்தின் மேற்பரப்பிலேயே அதிகமாக உள்ளது. ஆனால் இவை படிப்படியாக கீழ்மட்ட கடல் சாகித்தியத்தையும் பாதிக்கும். சமுத்திரங்கள் மனிதனின் நடவடிக்கைகளால் நிகழும். காபனீரொட்சைட்டு வெளியேற்றத்தில் 40 வீதத்தினைத் தன்னகத்தே ஏற்றுக் கொள்கின்றது. சமுத்திர ஆழ் ஆழி நீரோட்டமான்து அந்தாட்டிக்காக்கண்டத்தில் இருந்து தென் அமெரிக்காவரை செல்லுகின்றது. அடுத்தது அவுஸ்திரேலியாவரை செல்லுகின்றது. அடுத்தது ஆபிரிக்கா ஊடாக ஐரோப்பாவரை செல்லுகின்றது. வட அரைக்கோளத்தில் கிறீன்லாந்தில் இருந்து தென் அமெரிக்காவரை ஒரு நீரோட்டம் உள்ளது. அவ்வாறே இந்து சமுத்திரத்திலும் பசுபிக் சமுத்திரத்திலும் ஆழ் சமுத்திர நீரோட்டங்கள் உள்ளன. பூகோள வெப்பமாதலால் அதிகரிக்கும் ஒவ்வொரு 0.1 பாகை செல்சியஸ் வெப்பநிலையை குறைப்பதால் காலநிலை மாற்றத்தினால் நிகழக்கூடிய பெரிய பாதிப்புக்களைக் குறைக்கலாம். காலநிலை மாற்றம் ஆழ்கடல் சமுத்திர சாகித்தியத்தை நாம் இதுகானும் எதிர்பாராத வகையில் வெகுவாகப் பாதிக்கின்றது. பச்சைவீட்டு வாயுவின் வெளியேற்றத்தினைக் குறைக்க கடுமையான சட்டக்கட்டுப்பாடும், தீர்மானங்களும், செயற்பாடுகளும், அது தொடர்பான சமூகமயப்படுத்தலும் விரைவாகச் செயற்படுத்தப்படல் வேண்டும். இதனாலேயே எமது பூமாதேவியின் உதிரத்தில் உள்ள உயிர்கள் அனைத்தையும் காப்பாற்ற உதவும்.

# சமகால இலக்கிய முயற்சிகள்: கிளிநொச்சியில் ஆய்வரங்கு!

காவேரிக் கலாமன்றம் மற்றும் தமிழியல் ஆய்வு நடுவகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்டச் செயலகமும் மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் இணைந்து நடத்திய 'சமகால இலக்கிய முயற்சிகள்' ஆய்வரங்கு கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்டச் செயலரும், பண்பாட்டுப் பேரவையின் தலைவருமான திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன. 200க்குப் பின்னரான கிளிநொச்சி மாவட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகளை உள்ளடக்கியதாக குறித்த ஆய்வரங்கமானது இடம்பெற்றது.

வாழ்நாள் பேராசிரியரும், தமிழியல் ஆய்வு நடுவகத்தின் தலைவருமான அ.சண்முகதாஸின் தலைமையில் இடம்பெற்ற ஆய்வரங்கத்தில் ஐந்து ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

'தமிழ்க் கவியின் படைப்புகள்' எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் த.அஜந்தகுமாரும், 'யேசுவாவின் படைப்புகள்' எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல் துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணாவும், 'தீபச் செல்வனின் படைப்புகள்' எனும் தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை விரிவுரையாளர் தி.செல்வமனோகரனும், 'ஏழுமலைப் பிள்ளையின் படைப்புகள்' எனும் தலைப்பில் யாழ். அருணோதயாக் கல்லூரி ஆசிரியர் க.குணேஸ்வரனும், 'கருணாகரனின் படைப்புகள்' என்னும் தலைப்பில் யாழ். மகாஜனக் கல்லூரி ஆசிரியர் சி.ரமேஸும் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். ஆய்வாளர்களின் உரைகளைத் தொடர்ந்து மாணவர்களின் கருத்துப் பகிர்வுகள் சிறப்புற இடம்பெற்றன. இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச் செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், இலக்கிய ஆர்வலர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 இலட்சம் கோடி டொலர் இழப்பை ஏற்படுத்தவுள்ள எல் நினோ!



எல் நினோ என்பது உலகம் முழுவதும் பரவலாக பல்வேறு பகுதிகளிலும் வெப்ப நிலையை உயரச் செய்யும் ஒரு வகை காலநிலை நிகழ்வு. பசுபிக் கடல் பரப்பில் ஏற்படும் வெப்பநிலை அதிகரிப்புத்தான் 'எல் நினோ' என்று விஞ்ஞானிகள் விளக்கம் தருகின்றனர். பசுபிக் கடல்பரப்பு வெப்பநிலையை ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு அதாவது, 7 முதல் 24 மாதங்கள் வரை அதிகமாக்கும் நிகழ்வு இது. இந்த எல் நினோ எவ்வளவு வலிமையானதாக இருக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் அதீத மழை பெய்வதோ அல்லது கடுமையான வரட்சி ஏற்படுவதோ நிர்ணயமாகும். எல் நினோ ஏற்படுவது இயல்புதான். ஆனால், அது எப்போதும் ஏற்படும் ஒன்றல்ல. எப்போதாவது இருந்துவிட்டு ஏற்படும் நிகழ்வு. இவ்வாறிருக்கையில் இந்த ஆண்டு எல் நினோ ஆண்டாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது. எல் நினோதாக்கம் இந்த ஆண்டு குறிப்பிட்ட ஒரு கண்டத்துக்கோ அல்லது சில நாடுகளுக்கோ உரியதாக இருக்காது. இந்தத் தாக்கம் பரந்துபட்டதாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். இவ்வாறிருக்கையில், ஆஸ்திரேலிய அரசாங்கம், 'எல் நினோவால் நாட்டில் வரட்சியான நாள்கள் அதிகமாக இருக்கும். வெப்பமும் சற்று அதிகமாகக் காணப்படும் என்று தெரிவித்துள்ளது. ஜப்பான் அரசு, தனது நாட்டில் கடுமையான காட்டுத்தீ ஏற்படலாம் என்று கணித்துள்ளது. ஜப்பானில் இந்த ஆண்டு வசந்தகாலம் வழக்கத்தைவிட வெப்பம் நிறைந்ததாக இருந்தமைக்கு எல் நினோ நிகழ்வே காரணமாக இருக்கலாம் என்றும் கூறியுள்ளது. அமெரிக்காவில் கோடையிலேயே எல் நினோ தன் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அது சற்றுத் தள்ளிப்போனது. வசந்த கால பிற்பகுதியில் கொஞ்சம் பாதிப்பை ஏற்படுத்திய நிலையில் குளிர்காலம் நெருங்கும்போது எல் நினோவின் விளைவு கடுமையாகும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது. இதனால் அமெரிக்காவின் சில பகுதிகளில் குறிப்பாக தெற்கு கலிபோர்னியாவிலிருந்து மெக்சிக்கோ வளைகுடா வரை வழக்கத்தைவிட சற்று அதிகமான குளிரும், வடமேற்கு பசுபிக்கிலிருந்து ஓஹியோ பள்ளத்தாக்கு வரை வழக்கத்துக்கு மாறான வரட்சியும் நிலவும் என்று கூறப்பட்டுள்ளது. அதேபோல் நாட்டின் வடக்கு மாகாணங்களில் வழக்கத்துக்கு மாறான அளவில் வெப்பம் அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல் நினோ தாக்கம் பூகோளத்தில் மட்டுமல்லாமல் பொருளாதாரத்திலும் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தும். இதன் விளைவாக இந்த ஆண்டு உலகப்பொருளாதாரத்தில் 3 ட்ரில்லியன் அளவில் இழப்பு ஏற்படலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றத்தால் விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டு, தொழில்கள் நலிந்து, நோய்கள் மலிந்து இந்த பொருளாதார தேக்கம் ஏற்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது.



அதனால் பெரு போன்ற தென்னமரிக்கக் கண்ட நாடுகள் எல் நினோ விளைவை எதிர்கொள்ள 1.06 பில்லியன் டொலர் நிதியை ஒதுக்கீடு செய்து வைத்துள்ளன. புயல்களால் அதிக பாதிப்புகளை சந்திக்கும் பிலிப்பைன்ஸ் நாடும் சிறப்புக் குழுவை அமைத்து இப்போதிருந்தே பாதிப்புகளைக் கணிக்கவும், விளைவுகளை சமாளிக்கவும் திட்டங்களை தீட்ட முனைப்பு காட்டி வருகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரை எல் நினோ பாதிப்பு அதன் தாக்கத்தை ஏற்படுத்த 70 சதவீதம் வாய்ப்புகள் இருப்பதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்திய வானிலை ஆய்வு மையம், வேளாண் ஆராய்ச்சிக் கழகங்கள் ஆகியன இணைந்து தற்போதிருந்தே இந்தத் தாக்கத்தை எப்படிச் சமாளிப்பது என்பது தொடர்பாக ஆலோசனைகளைத் தொடங்கியுள்ளன. இலங்கை போன்ற சிறிய நாடுகளும்கூட எல் நினோவின் கோரப்பிடிக்கு இரையாவது இலகுதான். ஆதலால், இந்தப் பேராபத்தைப் புரிந்து இப்போதிருந்து பொறிமுறைகளை உருவாக்கும் பட்சத்தில் இலங்கை ஓரளவேனும் தப்பித்துக்கொள்ளலாம். இல்லையேல், வெந்த புண்ணில் வேல் பாய்வதைப்போன்றுதான் சிதிலமடைந்த பொருளாதாரத்தை எல் நினோ இன்னுமின்னும் சின்னாபின்னமாக்கும்.



# அகாலத்தின் குரல்

நான்கு சுவர்களுக்குள்
சுதந்திரமிழந்து போனது என் வாழ்க்கை
கனவுகளால் நிறைந்த நான்
அந்த சுவர்களுக்கு அப்பால்
எட்டிப்பாய்ந்து ஏதுமற்ற நாளைக்காக
அதன் நீட்சிக்காக நீண்ட நேர
காத்திருப்பொன்றிகாக
காத்திருக்கிறேன்

வெறுமை மொய்த்த மன வெளி
கழிந்து போன நினைப்புகளை அணிந்துகொண்டு
வீதி வலமொன்றிற்கு தயாராகிறது
மிடுக்கோடு

கோடுகளுக்குள் சிக்குண்ட
நிகழ்காலம் நீள மறுப்பதும்
நீர்த்துப்போகப்போகும் வருங்காலமும் கூட
வராமலையே போகலாம்

எனக்கான எனது உரிமங்கள்
மறுக்கப்பட்ட பட்டியலொன்றில்
சேர்க்கப்பட்டு என் குரல்
அகாலமொன்றால் நெரிக்கப்படலாம்

அன்றென் கனவுகள் விழிபிதுங்கி
வெறித்தபடி பார்க்கும் இந்த உலகத்தை

ஆரம்ப புள்ளியிடப்பட்ட என் வியாபிப்புகள்
மறுக்கப்பட்டு அந்த அகாலத்தின் கரங்களில்
திணிக்கப்பட்ட போது

நாளை பற்றிய உருவேற்க காத்திருந்த
காலம் வழிமறிக்கப்பட்டு சிறைப்பிடிக்கப்பட்டது

சிறைப்பட்ட சுவர்களுக்குள்
நான் எனும் நாளைய கனவுகள்
அணிந்துகொண்ட அகாலத்தின் அச்சம்
ஒன்றைத்தவிர முழுவதும்
துச்சாதன வெறியர்களால்
துகிலுரியப்பட

அகாலத்தின் ஆதியாக
நிர்வான உடை போர்த்திக்கொண்டது
ஏனக்கென அன்றெழுந்த அகாலத்தின் குரல்.

– பிரியங்கன் –



தேசிய கலை இலக்கியப்பேரவையின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நூறுமலர்கள் மலரட்டும் எனும் தொனிப்பொருளில் புத்தக அரங்கவிழா இணுவில் மத்திய கல்லூரியின் ஆரம்ப பாடசாலையில் கடந்த மாதம் 27ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது பல்வேறுபட்ட புத்தகங்கள் காட்சிப்படுத்தப்பட்டன. மேலும் சில நூல்களிற்கான அறிமுகவுரைகளும் இடம்பெற்றது. தொடர்ச்சியாக சன் நாடகக்குழுவினரால் காதலுக்கு மருந்து என்னவென்று சொல்வேண்டி எனும் நாடகம் நெறியாளர் கணேசராஜாவின் நெறியாள்கையில் இடம்பெற்றது. நிகழ்வில் தேசிய கலை இலக்கிய பேரவையினர் ,எழுத்தாளர்கள், மாணவர்கள், கலைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிரம் கொடுத்து வாழ்வை பகிருங்கள்



த.ரவினதாஸ்
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்
தேசிய குருதிமாற்று
பிரயோகசேவை,
பிராந்திய இரத்த நிலையம்,
போதனா மருத்துவமனை
யாழ்ப்பாணம்.

உலக சுகாதார நிறுவனம் இரத்ததானம் செய்வோரைச் சிறப்பிக்கும் முகமாக ஜூன் 14ஆம் திகதியை உலக குருதிக் கொடையாளர் தினமாகப் பிரகடனம் செய்து கொண்டாடுகின்றது.

2005 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வரும் இந்த நாள், ABO இரத்த வகையைக் கண்டுபிடித்து நோபல் பரிசு பெற்றவரான கார்ல் லாண்ட்ஸ்டெய்னெர் (Karl Landsteiner) பிறந்த நாள் ஆகும். ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தொனிப்பொருளில் கொண்டாடப்படும் குருதிக் கொடையாளர் தினம், இந்த முறை "உதிரம் கொடுங்கள், குருதிப்பாயம் (Plasma) கொடுங்கள், உயிரைப் பகிர்ந்து கொள்ளுங்கள், அடிக்கடி பகிர்ந்து கொள்ளுங்கள்" எனும் தொனிப் பொருளில் சர்வதேச ரீதியாகக் கொண்டாடப்படுகின்றது.

இந்தத் தினத்தில் உலகளாவிய ரீதியில் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்துவரும் குருதிக்கொடை யாளர்களும், இரத்ததான முகாம் ஒழுங்கமைப்பாளர்களும் இந்தச் சேவையில் ஈடுபடும் ஊழியர்களும் கௌரவிக்கப்படவுள்ளார்கள். இலங்கையிலும் தேசிய குருதிமாற்று பிரயோக சேவையினரால் இன்று கொழும்பு நாரஹேன்பிட்டி எல்விட்டிகல மாவத்தையில் அமைந்துள்ள தேசிய இரத்த நிலையத் தில் உலக குருதிக் கொடையாளர் தினம் கொண்டாடப்படுகின்றது.

தொடர்ச்சியாக இரத்ததானம் செய்துவரும் குருதிக்கொடையா ளர்களும், இரத்ததானமுகாம் ஒழுங்கமைப்பாளர்களும் நிகழ்வில் கௌரவிக்கப்படுகின்றார்கள். வடமாகாண பிராந்திய இரத்த நிலையமாகிய யாழ்ப் பாணம் போதனா மருத்துவமனை இரத்த வங்கியிலும் தெல்லிப்பழை, பருத்தித்துறை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு இரத்த வங்கிகளில் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்து சாதனை படைத்த குருதிக் கொடை யாளர்களும், இரத்ததானமுகாம் ஒழுங்கமைப்பாளர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் புதிதாகத் திறந்த இருதய சத்திர சிகிச்சை, சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை போன்ற சத்திர சிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதனால் குருதியின் தேவை அதிகரித்துள்ளது. எதிர்காலத்தில் குருதிக்கொடை யாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் வடமாகாணத்தில் சிறந்த குருதிமாற்று பிரயோக சேவையை மேற்கொள்ளமுடியும்.

இளைஞர்கள், யுவதிகள் அச்சத்தையும், மூடநம்பிக்கையையும் தவிர்த்து உங்கள் உதிரத்தை தொடர்ச்சியாக வழங்கி வாழ்வை பகிர்ந்து கொள்ள முன்வர வேண்டும் என்று அன்பாக கேட்டுக் கொள்கிறோம்.

---

பேராசிரியர் தை.தனராஜ்

## நீத்தார் நயப்புரை

பலாலி ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபரான ஆர்.எஸ். நடராஜா கடந்த வருடம் மே மாதம் 20ஆம் திகதி இயற்கை எய்தினார். அவரைக் கௌரவிக்கும் முகமாக இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

### அமரர் ஆர்.எஸ்.நடராஜா

# ஆளுமை மிக்க ஆசிரிய கல்வியாளர்

அமரர் ஆர்.எஸ் நடராஜா இந்த நாட்டின் பெருமதிப்புக்கும் கௌரவத்துக்கும் உரித்தான ஆசிரிய கல்வியாளர்களில் ஒருவராவார். உயர் மானிட பண்புகளுக்கு இலக்கணமாக வாழ்ந்து 'ஆர்.எஸ்' என அனைவராலும் நேசிக்கப்பட்ட அப்பெருமகன் கடந்த வருடம் மே மாதம் 20ஆம் திகதி எம்மை விட்டு மறைந்தார்.

1933ஆம் ஆண்டு நெடுந்தீவில் பிறந்த ஆர்.எஸ், தனது ஆரம்பக்கல்வியை உள்ளூர் பாடசாலைகளில் பூர்த்திசெய்து, தனது பல்கலைக்கழகக் கல்வியை சென்னைப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார். 1958இல் பட்டதாரியாகி நாடு திரும்பினார். பல்வேறு பாடசாலைகளில் ஆசிரியராகப் பணிபுரிந்த பின்னர், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்தி செய்துகொண்டு 1971ஆம் ஆண்டு கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராக இணைந்து கொண்டார். 1975ஆம் ஆண்டு பலாலி ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராக இணைந்து கொண்ட ஆர்.எஸ். துணை அதிபராகவும் பின்னர் அதிபராகவும் பணியாற்றி 1994ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதி சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.


வடபகுதி மக்கள் பெரிய துன்பங்களையும் சிரமங்களையும் அனுபவித்த அக்காலப் பகுதியில் பலாலி ஆசிரியர் கலாசாலையை கட்டிக்காத்து வளர்த்தெடுத்த பெருமை ஆர்.எஸ்.க்கு உரியது. அக்காலத்தில் கலாசாலை இடம்பெயரும் நிலை ஏற்பட்ட போதும் ஆர்.எஸ். தனது அயரா உழைப்பினாலும் உயரிய தலைமைத்துவத் திறன்களாலும் கலாசாலையைப் பாதுகாத்தார். அவரது அர்ப்பணிப்பையும் தியாகத்தையும் கலாசாலை சமூகத்தினரும் மக்களும் மறந்துவிடவில்லை. ஆர்.எஸ் ஓய்வுபெற்று விடைபெற்ற அன்று உதயன் பத்திரிகையில் சேவைநலன் பாராட்டு மலரை வெளியிட்டு தமது அன்பையும் நன்றியையும் அவர்கள் வெளிப்படுத்தினர். அம்மலரில் வண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மாவட்டச் செயலர் சா.மாணிக்கவாசகர், பிரதேசக் கல்விப்பணிப்பாளர் இரா.சுந்தரலிங்கம், பேராசிரியர் சி.சற்குணராசா, பேராசிரியர் வ.ஆறுமுகம், செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி முதலான பெருமக்கள் பலர் ஆர்.எஸ் பற்றிய தமது மனப்பதிவுகளை பதிவுசெய்து ஆசானைக் கௌரவப்படுத்தினர். 1968இல் இந்த நாட்டில் மாணவ ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. அவ்வாறு மலையகத்தில் நியமனம் பெற்ற இக்கட்டுரையாளரும் இன்னும் பலரும் ஆசிரியர் பயிற்சிக்காக கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலைக்கு அடியெடுத்த முதல் நாளில் முதலாவது விரிவுரையை ஆர்.எஸ். நிகழ்த்தினார். எமக்கு மாத்திரமின்றி ஆர்.எஸ்ஸுக்கும் அதுவே முதலாவது விரிவுரையாக அமைந்தது. அன்று முதல் அவர் மரணமடைந்த நாள்வரை அவருடனான பணிவும் அன்பும் நிறைந்த நட்பினை நான்பேணி வந்தேன்.

கல்வித்தத்துவம், கல்வி உளவியல், கல்வி வரலாறு முதலான கற்கைநெறிகளில் ஆழ்ந்த அறிவும் புலமையும் நிறைந்தவராக விளங்கிய ஆசான், ஆசிரிய மாணவர்களின் ஆழ்ந்த அன்பையும் உயரிய மரியாதையையும் வென்றவராக விளங்கினார். கல்வியியலை மாத்திரமல்லாது மானிடத்தையும் அவர் எமக்குக் கற்பித்தார். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் மலையக மாணவர்களாகிய எம்மை இளவாலையிலிருந்து அவரது இல்லத்துக்கு அழைத்து விருந்தளித்து அன்பு காட்டினார். சேந்தாங்குளம் கடற்கரையில் அவருடனும் அவரது குடும்பத்தினருடனும் கழிந்த இனிய பொழுதுகள் ஐம்பது வருடங்களுக்குப் பின்னரும் நெஞ்சில் நிலைத்து நிற்கின்றன. பின்னாளில் பலரை ஒரு கல்வியியல் பேராசிரியராக உயர அடித்தளமிட்டவர் ஆர்.எஸ் என்பதை நான் பணிவுடன் பதிவுசெய்ய விரும்புகிறேன். அவர் இன்று எம்மிடையே இல்லை. ஆனால் உலகெங்கும் பரந்து வாழும் அவரது ஆயிரக்கணக்கான மாணவர்களின் நெஞ்சங்களில் அவர் என்றும் பெருமையுடன் வீற்றிருக்கிறார். தனது வாழ்நாள் முழுதும் ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் கல்விப் பணிபுரிந்த அவருடைய திருநாமம் என்றும் நிலைத்திருக்கும் என நம்புகிறேன்.

---



வல்வெட்டித்துறை இந்திர விழா அண்மையில் கோலாகல மாக இடம்பெற்றது. இந்துத் தெய்வங்களின் உருவங்கள் மிகவும் பிரமாண்டமான முறையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. காண்போரைக் கவரும் வகையில் அவை அமைந்தன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபோகச் செய்கையில் 'நாவா' பூச்சித் தாக்கம்!

## கிளிநொச்சி விவசாயிகள் கவலை

**கிளிநொச்சி, ஜூன் 14**

**கிளிநொச்சி ஆனைவிழுந்தான் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் சிறுபோக நெற்செய்கையில் நெல் மணிகளை ஒருவித நோய் தாக்குவதால் பயிர்களின் வளர்ச்சி குன்றுகின்றது என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

குறித்த குளத்தின் கீழ் 20 ஏக்கரில் இம்முறை சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

சிறுபோக நெல் வயல்களில் தற்போது கதிர்கள் வர ஆரம்பித்துள்ள நிலையில் ஒருவகை நோய்த்தாக்கம் காரணமாக பயிர்கள் வளர்ச்சி குன்றுகின்றன.

அதனால் கதிர்கள் நெல்மணியற்ற பதர்களாகக் காணப்படுகின்றன. இரண்டு மூன்று தடவைகள் பூச்சி நாசினி விசிறியபோதும் எந்தவிதபயனும் கிடைக்கவில்லை என விவசாயிகள் தெரிவித்தனர்.

நோய்த்தாக்கத்துக்குள்ளான வயல்களை வன்னேரிக்குளம் மற்றும் அக்கராயன் குளம் விவசாய போதனாசிரியர்கள் நேரில் சென்று பார்வையிட்டனர்.

'நாவா' எனும் பூச்சி இனத்தின் தாக்கம் நெல் மணிகளின் சாற்றை உறிஞ்சும்போது சப்பி அடைகிறது. அதனால் விளைச்சல் குறைவடையும் வாய்ப்புள்ளது. பூச்சிகளை விரட்டும் சேதனப் பூச்சிநாசினிகளை விசிறவேண்டும். அத்துடன் வேப்பம் எண்ணெய் கலந்து விசிறினால் வரம்புகளில் உள்ள களைகளைக் கட்டுப்படுத்தமுடியும்.



இந்த நோய்த்தாக்கம் சம்பந்தமாக விவசாயிகள் விழிப்பாக இருக்க வேண்டும் என விவசாயப் போதனாசிரியர் சிவநாதன் டிறிஜன் குறிப்பிட்டார். (ச-113)

# கசிப்புடன் இளைஞர் சாவற்கட்டில் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 14

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாவற்கட்டுப் பகுதியில் 10 லீற்றர் கசிப்பு வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் மானிப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

உடைமையில் கசிப்பு வைத்திருப்பதாகக் கிடைத்த தகவலுக்கமைய நேற்று இந்தக் கைது இடம்பெற்றது.

அதேபகுதியைச் சேர்ந்த 23 வயதான இளைஞரே கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபரை சட்டநடவடிக்கைக்குட்படுத்த மானிப்பாய் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-125)

## மஹோற்சவம்

சாவகச்சேரி ஜூன் 14

கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் கோவில் (புலுட்டையன் பிள்ளையார்) வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். (ய-9)

✦ ✦ ✦

கொடிகாமம் ஜூன் 14

சரசாலை இலந்தைத்திடல் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலயத்தின் மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. (ய-159)

✦ ✦ ✦

கொடிகாமம், ஜூன் 14

மீசாலை வடக்கு அருள்மிகு இராமாவில் கந்தசுவாமி ஆலயத்தில் கடந்த 8ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய வருடாந்த மஹோற்சவத்தின் சப்பறத்திருவிழா நாளை வியாழக்கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருக்கல்யாண உற்சவமும் நடைபெறவுள்ளது. (ய-159)

### முல்லைத்தீவு பறங்கியாற்றில்

# அனுமதிக்கு முரணாக மணலகழ்ந்தோர் கைது

முல்லைத்தீவு - மாந்தை கிழக்கு பறங்கியாற்றுப் பகுதியில் அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறி மணலேற்றிய மூவர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் தொடர்ச்சியாக மணல அகழ்வு இடம்பெறுகிறது என நட்டாங்கண்டல் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சோதனையில் மணலகழ்வு முறியடிக்கப்பட்டது.

இதன்போது மணலகழ்வுக்குப் பயன்படுத்திய உழவு இயந்திரங்கள் கையகப்படுத்தப்பட்டதுடன் மணலகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களை மாங்குளம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என நட்டாங்கண்டல் பொலிஸார் தெரிவித்தனர். அதேவேளை வன்னிவிளாங்குளம் மூன்றுமுறிப்புப் பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி காட்டுமரங்களை வெட்டி ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்தை வனவளத் திணைக்களத்தினர், விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து நடத்திய சோதனையில் கையகப்படுத்தப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர். (ச-19)


**கார்/வான் வாடகைக்கு**

கார்கள், வான்கள் வாடகைக்கு விடப்படும்.

**077 89 89 691**

**வேலையாள்கள் தேவை**

நல்லூர் பகுதியில் அமைந்துள்ள தையற் கடைக்கு பெண் வேலையாள்கள் தேவை.

**076 541 3910**

**தவறவிடப்பட்டது**

பொண்ணுச்சாமி சர்வானந்தன் என்பவரது தே.அ.அட்டை (522893684V) சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் சைக்கிள் Document என்பன அடங்கிய கறுப்பு நிற பணப்பை, மின்சார நிலையவீதி, சுன்னாத்தில் இருந்து இணுவில் வீதி ஊடாக சுதுமலை செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கொடுத்துதவவும்.

தொடர்புகளுக்கு: **077 356 8729**
**076 883 6835**

(cs25107) N-1)

**St.Patrick's College, Jaffna**

**புனித பத்திரிசியார் கல்லூரி யாழ்ப்பாணம்**


**புதிய அனுமதி - 2024**

2024 ஆம் ஆண்டுக்கான தரம் 1, தரம் 6 வகுப்புகளுக்கான புதிய அனுமதி விண்ணப்பப் படிவங்களை கல்லூரி நாட்களில் காலை 8.00 மணியிலிருந்து பி.ப. 3.30 மணிவரை பிரதான அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- **தரம் 1 இற்கு** அனுமதி கோரும் மாணவர்கள் **01.02.2018 - 31.01.2019** இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்திருக்க வேண்டும்.
- **தரம் 6 இற்கு** அனுமதி கோரும் மாணவர்கள் **01.02.2013 - 31.01. 2014** இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்திருக்க வேண்டும்.
- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை பிறப்புச் சான்றுப் பத்திரங்களுடன் நேரில் வந்து ஒப்படைக்கவும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசி நாள் **21.07.2023**
- **தரம் 1 இற்கும், தரம் 6 இற்குமான அனுமதிப் பரீட்சை 30.09.2023** சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

அதிபர்.

**31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்**



**அமரர் கந்தர் செல்லத்துரை**

இன்று (14.06.2023) புதன்கிழமை 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நாளைமறுதினம் (16.06.2023) வெள்ளிக்கிழமை அன்று வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நடைபெறும்.

காற்றோடு கனவான நாட்கள்
எத்தனை ஆண்டுகள் நகர்ந்திடினும்
என்றைக்கும் எம் உள்ளம்
கனத்திடுமே அப்பா! உங்கள் நினைவுகளால்....

கைதடி மேற்கு,
கைதடி.

குடும்பத்தினர்
071 366 7044

(cs. 24681) (2.6)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மடுமாதா அன்னைக்கு அடுத்தாண்டில் 'யூபிலி'

## இம்முறை பெருவிழாவில் பிரகடனம்

**மன்னார், ஜூன் 14**

**மன்னார் மறைமாவட்டத்தின் மருதமடு அன்னையின் முடிசூட்டு நூற்றாண்டு நிகழ்வை மன்னார் மறைமாவட்டம் 'யூபிலி' பெருவிழாவாக அடுத்த ஆண்டு கொண்டாடவுள்ளது. அதற்கு இவ்வருடப் பெருவிழாவில் பிரகடனம் செய்யப்படவுள்ளது என மன்னார் மறைமாவட்டம் அறிவித்துள்ளது.**

மடுத் திருப்பதியின் பெருவிழாவை முன்னிட்டு நடைபெறவேண்டிய நடைமுறைகள் மற்றும் பக்தர்களின் தேவைகளுக்கான நடைமுறைகள் பற்றி மன்னார் மாவட்டச் செயலர் தலைமையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முன்னாயத்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

கலந்துரையாடலின் பின்னர் மன்னார் இதுகுறித்து மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 23ஆம் திகதி மருதமடு அன்னையின் ஆடி மாத விழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை மாதம் 2ஆம் திகதி காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தொடர்ந்து மருதமடு அன்னையின் திருச்சொரூப ஆசீருடன் திருவிழா நிறைவு பெறும். இந்தத் தினத்தில் மற்றொரு விழாவை முன்னெடுப்பதற்கு ஆரம்ப நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அதாவது 1924 ஆம் ஆண்டு மருதமடு திருப்பதியிலே பல ஆயர்கள் ஒன்றுகூடி மருதமடு அன்னைக்கு முடிசூட்டும் விழாவை மேற்கொண்டிருந்தனர்.

இதன் நூற்றாண்டு நிகழ்வை மன்னார் மறைமாவட்டம் யூபிலி பெருவிழாவாக அடுத்த ஆண்டு கொண்டாடவுள்ளது. அதனைமுன்னிட்டு இந்தாண்டு பெருவிழாவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை யூபிலி பிரகடனம் செய்யவுள்ளார். யூபிலியை வெளிப்படுத்தும் நோக்குடன் வருடம் முழுவதும் யூபிலி கொடி மருதமடு அன்னையின் ஆலயத்தில் பறக்கவிடப்படும். அத்துடன் யூபிலியை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டம் முழுவதும் பல நிகழ்வுகள் முன்னெடுக்கப்படும்.

அதேவேளை இம்முறை ஆடிப்பெருவிழாவுக்கு 3 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்பர் என எதிர்பார்க்கப்படுகிறது - என்றார். (ச-60)

## இலங்கை வருவோருக்கு ஆஸி., அமெ. எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 14

அவுஸ்திரேலியா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட சில நாடுகள் இலங்கைக்கான பயண எச்சரிக்கை ஆலோசனைகளைத் தொடர்ந்தும் பேணுகின்றன. இலங்கைக்குச் செல்லும் தங்களது நாட்டுப் பிரஜைகளை எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்று அந்த நாடுகள் தொடர்ந்தும் அறிவுறுத்துகின்றன.

கடந்த ஒக்ரோபர் மாதம் வெளியிடப்பட்ட அமெரிக்கப் பயண ஆலோசனையின்படி, எரிபொருள் மற்றும் ஔடதத் தட்டுப்பாடு, உள்நாட்டு அமைதியின்மை என்பன காரணமாக சுற்றுலாப் பயணிகள் இலங்கையில் அதிக எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்று கூறப்பட்டது. இலங்கையில் பொருளாதார நிலைமை தொடர்பான போராட்டங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஏற்படலாம். சில சந்தர்ப்பங்களில் போராட்டங்களில் ஈடுபடுபவர்களைக் கலைப்பதற்காக பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகங்களை மேற்கொண்டதாக தெரிவித்து அமெரிக்கா பயண எச்சரிக்கை ஆலோசனையை கடந்த ஒக்ரோபர் மாதம் வெளியிட்டது. இந்தப் பயண எச்சரிக்கை ஆலோசனை இதுவரை மாற்றப்படவில்லை.

இதேவேளை, கடந்த நவம்பர் மாதம் அவுஸ்திரேலியாவால் வெளியிடப்பட்ட பயண ஆலோசனையானது, தற்போதும் நடைமுறையில் உள்ளது. உள்நாட்டு அமைதியின்மை, எரிபொருள் மற்றும் இதர பொருள்களின் பற்றாக்குறை காரணமாக இலங்கையில் உள்ள தங்களது நாட்டுப் பிரஜைகள் அதிக அவதானத்துடன் இருக்கவேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## குற்றம் நிரூபிக்கப்பட்டாலேயே லோகான் மீது நடவடிக்கை

### மழுப்புகின்றது பெரமுன

கொழும்பு, ஜூன் 14

இராஜாங்க அமைச்சர் லொகான் ரத்வத்தைக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் நிரூபிக்கப்படும்வரை அவருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் வெலிக்கடை சிறைச்சாலைக்குள் இராஜாங்க அமைச்சர் 2021 ஆம் ஆண்டு பலவந்தமாக நுழைந்த விதம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட தனிநபர் ஆணைக்குழு கொலை முயற்சி குற்றச்சாட்டுகள் உட்பட குற்றச்சாட்டுகளை சுமத்தவேண்டும் என பரிந்துரை செய்துள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும்வரை இராஜாங்க அமைச்சருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்போவதில்லை என பொதுஜனபெரமுன தெரிவித்துள்ளது.

குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பொதுஜன பெரமுன இராஜாங்க அமைச்சருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமா? என கட்சியின் பொதுச்செயலாளர் சாகரகாரியவசத்திடம் கேட்கப்பட்டபோது, பல நடைமுறை பிரச்சினைகள் உள்ளதால் கட்சி அவ்வாறான நடவடிக்கையை எடுக்கும் நிலையில் இல்லை என சாகர காரியவசம்தெரிவித்துள்ளார்.

பொலிஸார் குற்றச்சாட்டுகளை சுமத்தாவிட்டால் அல்லது உத்தியோகபூர்வமாக குற்றச்சாட்டுகள் பதியப்படாவிட்டால் கட்சியால் எதையும் செய்ய முடியாது என சாகரகாரியவசம் தெரிவித்துள்ளார்.

விசாரணை அறிக்கையொன்றை மட்டும் அடிப்படையாக வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு எதிராக எவராலும் நடவடிக்கை எடுக்க முடியாது.

கட்சி அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டால் அந்த உறுப்பினர் கட்சிக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இராஜாங்கஅமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் நிரூபிக்கப்பட்டால் நாங்கள் நடவடிக்கை எடுக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

### கடல்சார் சூழல் பேணல்

## நகுலேஸ்வரா ம.வித்தியில் மாணவருக்குப் பரிசில்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 14

மாணவர் மத்தியில் கடல்சார் சூழலைப் பேணும் முகமாக கீரிமலை நகுலேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு பாடசாலை அதிபர் த.தயானந்தன் தலைமையில் கீரிமலை கடற்கரைப் பகுதியில் இடம் பெற்றது.

பாடசாலைச் சுற்றாடல் கழகமும் எதிர்காலத்துக்குரிய சுற்றாடல் கழகமும் இணைந்து இந்தப் போட்டிகளை நடத்தின. நிகழ்வில் பிரதம விருந்தினராக கடல்சார் சுற்றுச் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட கடல்சார் சுற்றுச் சூழல் அதிகாரி ப.சதீஸ்குமார், வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் ப.அருந்தவம், எதிர்கால சுற்றுச்சூழல் கழகத்திறன் தலைவர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் மற்றும் சான்றிதழ்களை வழங்கிவைத்தனர். (ச-125)

## சுகாதார சேவையில் புதிதாக இணையும் 406 மருத்துவர்கள்

### சுகாதார அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜூன் 14

இரண்டு வாரங்களில் சுகாதார சேவைக்கு புதிதாக 406 மருத்துவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எதிர்வரும் மாதத்தில் தாதியர் சேவைக்காக 2 ஆயிரத்து 200 பேர் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். எதிர்வரும் இரு வாரங்களில் சுகாதார சேவைக்கு புதிதாக 406 மருத்துவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். மருந்தின் விலையை நாளை முதல் 16 வீதத்தால் குறைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு 3 மாதங்களுக்கு ஒருமுறை மருந்தின் விலை மீளாய்வு செய்யப்படும் - என்றார். (எ-இ)

### மடுப் பெருவிழாவில்

## டெங்கு நுளம்பை அழிக்க புகையூட்டல் இடம்பெறாது

மன்னார், ஜூன் 14

மன்னார் மடுத்திருப்பதியின் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகியுள்ள நிலையில், இம்முறை டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக ஆலய வளாகத்தில் புகையூட்டல் செயற்பாடு முன்னெடுக்கப்படமாட்டாது என மன்னார் மாவட்ட தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு பொறுப்பதிகாரி மருத்துவ கலாநிதி கதிர்காமநாதன் சுதாகரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டச் செயலர் ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்ற மடுத்திருவிழாவுக்கான முன்னாயத்தக் கலந்துரையாடல் அண்மையில் இடம்பெற்றது.

கூட்டத்தில் சுகாதாரம் தொடர்பில் ஆராய்கையில், நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பெருவிழாவுக்கு பக்தர்கள் வருகைதர இருப்பதால் நாட்டில் தற்போது தீவிரம் பெற்றுள்ள டெங்கு அபாயத் தடுப்பு வழிகள் குறித்து கலந்துரையாடப்பட்டன.

இதன்போது கடந்த காலங்களைப் போன்று நுளம்பைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்படும் புகையூட்டல் செயற்பாடு தற்பொழுது உகந்தது அல்ல.

டெங்கு நோயைப் பரப்பும் நுளம்புகள் காணப்படும் இடத்தில் மட்டும் தேவையேற்படின் வதிவிடத்தின் உட்பகுதியில் மட்டும் புகையூட்டல் மேற்கொள்ளப்படும்.

ஆலயத்தின் வெளிப்பகுதியில் புகையூட்டல் செயற்பாடு இடம்பெறாது.

அத்துடன் திருவிழாவை முன்னிட்டு சுகாதாரத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் அனைத்துச் செயற்பாடுகளும் வழமைபோன்று இடம் பெறும் என மன்னார் மாவட்ட தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவு பொறுப்பதிகாரி சுட்டிக்காட்டினார். (ச-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 05 . 1964



மறைவு 13 . 06 . 2023

## திருமதி அமுதஜோதி சண்முகசுந்தரலிங்கம்

அச்சுவேலி தம்பாலையைப் பிறப்பிடமாகவும் யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமுதஜோதி சண்முகசுந்தரலிங்கம் அவர்கள் நேற்று (13.06.2023) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசோதிலிங்கம் கமலாதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுந்தரம் பத்மாவதி தம்பதியரின் மருமகளும், சண்முகசுந்தரலிங்கம் (சுந்தரலிங்கம்) அவர்களின் பாசமிகு மனைவியும், சாருகேசி (ஆசிரியர் - யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்), வாகீசன் (முகாமையாளர் - நிர்வாகக் கிளை MAS), திருபுரன் (சுவிஸ்) ஆகியோரின் அருமைத்தாயாரும், கஜன் (தாதிய உத்தியோகத்தர்- யாழ். போதனா வைத்தியசாலை), அபிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், கரைச்சி), கீர்த்தனா (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், பிரஜன், கவிஸ்னா, துருவன், றியா ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும், அகில்ஜோதி, அமரர் உதயஜோதி, அருள்ஜோதி, அருணஜோதி (ஆசிரியர் - நவீல்ட் பாடசாலை, கைதடி), கமலவேள் (சுவிஸ்), கமலராஜ், தீமோதி கமலஸ்ரீ (கனடா) ஆகியோரின் சகோதரியும், அமரர் சுந்தரலிங்கம் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்), அமரர் மீனாட்சி சுந்தரலிங்கம் (கனடா), பத்மசுந்தரி (லண்டன்), சிவகாமசுந்தரி (லண்டன்), கற்பகமதி, அமரர் கனகசுந்தரலிங்கம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2023) புதன்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் 24/3, இந்துக் கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

24/3, இந்துக் கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25232) A-1

# மரண அறிவித்தல்

## திரு.மாணிக்கம் இந்திரகுமார்

(இலங்கை போக்குவரத்துச் சபை ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்)

தோற்றம் 09.09.1955 — மறைவு 13.06.2023



மட்டக்களப்பு வாழைச்சேனையைப் பிறப்பிடமாகவும் நறுவிலியடி, புலோலி தெற்கு, புலோலியை வதிவிடமாகவும் கொண்ட திரு.மாணிக்கம் இந்திரகுமார் (இலங்கை போக்குவரத்துச்சபை ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்) நேற்று (13.06.2023) செவ்வாய்க்கிழமை அதிகாலை 12.07 மணிக்கு தனது 68 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் அழகேஸ்வரி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பாறுபதி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சகுந்தலா அவர்களின் அன்புக் கணவரும், பிரதீபா, பிரசாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சுரேந்திரன், நிர்மலன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தம்பி (காலஞ்சென்ற), சியாமிகா, வினுஷாந் ஆகியோரின் பாசமிகு பேரனும், இராசம்மா, (காலஞ்சென்ற) இராசலிங்கம் மற்றும் நேசலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2023) வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் ஆரம்பமாகி முற்பகல் 10.00 மணியளவில் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உற்வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(In.42712) (N.12

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் திருமதி ஜெயநாயகி தங்கராசா

மலர்வு 13.07.1948 — உதிர்வு 26.05.2022

திதி : ஏகாதசி (14.06.2023)



அன்பினை அள்ளி வழங்குவதில் நாயகியாய்
வீடுதேடி வருபவர்களுக்கு பாசத்துடன்
விருந்தோம்புவதில் சிறந்தவராய்
பேரப்பிள்ளைகளை ஆசையுடன் அன்னமூட்டி
அரவணைத்தவராய்
எல்லா நொடிகளிலும் துணிவுடனும்
புன்முறுவலுடனும்
சிறந்து விளங்கிய எங்கள் அம்மா
நம்மை விட்டு விண்ணுலகு சென்றாலும்
உங்கள் நினைவலைகள் நீங்காதம்மா

பிரதீபன்
குடும்பத்தினர்
கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளித்தட்டில் வாள்வெட்டு!

யாழ்ப்பாணம், ஜூன் 14
மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சென். பீற்றர்ஸ் தேவாலயப் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் மூவர் காயமடைந்தனர்.
இரு அணிகளுக்கு இடையில் நடைபெற்ற கிளித்தட்டுப் போட்டியில் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.
தாக்குதலில் 38, 29, 23 வயதுடைய இளைஞர்களே காயமடைந்துள்ளனர். அவர்களில் இருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-125)

## நீரிழிவைக் குணப்படுத்த கறுவாவிலிருந்து மருந்து

கொழும்பு, ஜூன் 14
நீரிழிவு நோயை குணப்படுத்துவதற்கு கறுவாவிலிருந்து புதிய மாத்திரையொன்றை இலங்கை உயிரியல் தொழில்நுட்ப நிறுவனத்தினர் (நனோ) கண்டுபிடித்துள்ளனர்.
இந்த மாத்திரை விரைவில் பரிசோதனை செய்யப்பட்டு, ஆயுள்வேத சிகிச்சை நிலையங்களின் ஊடாக விநியோகிக்கப் படவுள்ளது. இலங்கையில் நீரிழிவு நோயாளர்கள் தற்போது மெற்போமின் மாத்திரைகளைப் பயன்படுத்துகின்றனர். இந்த நிலையில், இந்த மாத்திரை மெற்போமினுக்குப் பதிலாகப் பயன்படுத்தக் கூடியது என்றும் இதன்மூலம் மெற்போமினுக்காகச் செலவிடும் பணத்தை கணிசமான அளவுக்குக் குறைக்கலாம் என்றும் உயிரியல் தொழில்நுட்ப நிறுவன ஆலோசகர் வஜிர பெரேரா தெரிவித்துள்ளார். (அ-ம-6)

### அறிக்கை...

பில் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மக்களும், அதிகாரிகளும் சுட்டிக்காட்டிய போதும், அவை எவற்றுக்கும் உரிய முடிவுகள் எடுக்கப்படாமலேயே நேற்றைய கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் 'உப்புச்சப்பில்லாமல்' முடிவுக்கு வந்தது.
பிரச்சினைகள், குறைபாடுகள் தொடர்பில் பிரஸ்தாபிக்கப்பட்டபோது, எல்லாவற்றுக்கும் கண்ணைமூடிக்கொண்டு 'எனக்கொரு அறிக்கை சமர்ப்பியுங்கள்' என்ற மந்திரத்தையே, ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா திரும்பத் திரும்ப ஒப்புவித்தமையால், கூட்டத்தில் கலந்துகொண்ட பலரும் அதிருப்தியடைந்தனர்.
மாவட்ட மட்டத்தில் தீர்க்கப்படாத, அவசியமான, மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகள், குறைகள், புதிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்து தீர்க்கமான முடிவெடுத்து, நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதே மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களின் நோக்கமாக இருக்கும். அதேபோன்று கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றபோது, தீர்க்கப்படாத பல பிரச்சினைகளுக்குத் தீர்க்கமான முடிவுகள் கிடைக்கும் என்று மக்கள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் மின்சார இணைப்புப் பிரச்சினை, சட்டவிரோத மணல் அகழ்வு, காணி விடுவிப்பு, காணி அபகரிப்பு உள்ளிட்ட பல பிரச்சினைகள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டபோது, அவை எவற்றுக்கும் எந்த முடிவுகளையும் அறிவிக்காமல், 'எனக்கொரு அறிக்கை சமர்ப்பியுங்கோ, மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பியுங்கோ, கோரிக்கைக் கடிதம் ஒன்றை அனுப்பிப் போட்டு எனக்கொரு பிரதி தாங்கோ' என ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரான அமைச்சர் டக்ளஸ் தொடர்ச்சியாகச் சொல்லிக் கொண்டிருந்தார். பொதுமகன் ஒருவர் தனது பிரச்சினையை கூட்டத்தில் முன்வைத்தபோது, பழக்கதோசத்தில் அமைச்சர் டக்ளஸ் 'ஐயா, இது பற்றி எனக்கு ஒரு கடிதம் தாங்கோ' என்று சொல்ல, பதிலுக்கு அந்தப் பொதுமகன் 'அமைச்சருக்கு இது தொடர்பில் கடந்த முறை கூட்டம் நிறைவடைந்ததும் ஜூன் முதலாம் திகதியே கடிதம் தந்துவிட்டேனே' என்று கூற, கூட்டத்தில் இருந்தவர்கள் பலமாகச் சிரித்தனர். அசடு வழிந்த அமைச்சர், அதைமறைக்கப் பெரும் பிரயத்தனப்பட்டார்.
இவ்வாறு எல்லாவற்றுக்கும் 'அறிக்கை சமர்ப்பியுங்கோ' என்று அதிகாரிகளுக்கு உத்தரவிடுவதற்கா இந்த ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்? ஒரு முடிவைக்கூட அமைச்சர் எடுக்கத் துணிவில்லாதவரா?' எனக் கூட்டம் முடிந்ததும், அதில் கலந்துகொண்ட அதிகாரிகளும், மக்களும் தமக்குள் சொல்லியபடி, எரிச்சலோடு சென்றதை அவதானிக்க முடிந்தது. (அ-113-27)

### வவு. பல்கலையில்...


வேந்தர் பேராசிரியர் மங்களேஸ்வரன் தெரிவித்தார்.
கடந்த மாதம் 15ஆம் திகதி இரண்டாம் வருட மாணவர்கள் புதுமுக மாணவர்களை சேறு நிரம்பிய குழிக்குள் இறக்கி, சேற்றால் குளிக்கவைத்தனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இது தொடர்பில் கொழும்பு ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பல்கலைக்கழக ஒழுக்காற்றுக்குழு இந்த விடயத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுசென்றுள்ளது. பகிடிவதையில் ஈடுபட்ட மாணவர்களுக்கு வகுப்புத்தடை விதிப்பதா அல்லது மாணவர்களை பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேற்றுவதா என்பது தொடர்பில் விரைவில் தீர்மானம் எடுக்கப்படும். எக்காரணம்கொண்டும் பல்கலைக்கழக வளாகத்துக்குள் ளேயோ வெளியேயோ பகிடிவதையை அனுமதிக்க முடியாது- என்றார். (அ-ம-6)

### விபத்தில்...

உயிரிழந்தார். அலெக்ஸ் ஜூட் ஜென்சிகா (வயது -38) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
வவுனியா - செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த அந்தப் பெண், கடந்த 8ஆம் திகதி தனது கணவனுடன் மோட்டார்சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது பாவற்குளம் மருத்துவமனைப் பகுதியில் நாயொன்று வீதிக்குக் குறுக்காகச் சென்றதால், விபத்தில் சிக்கியுள்ளார். படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், நேற்று உயிரிழந்தார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (அ-ம-26)


# மரண அறிவித்தல்

## கந்தையா சிவசுப்பிரமணியம்



**தோற்றம்** 26.04.1939 **மறைவு** 13.06.2023

குமரகோட்டம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவசுப்பிரமணியம் நேற்று (13.06.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கநாச்சி தம்பதியரின் அன்பு மகனும், சிவபாக்கியம் அவர்களின் பாசமிகு கணவரும், உதயராணி, மோகனராணி, காலஞ்சென்ற பர்ப்பராணி (பாமா) ஆகியோரின் அன்புத் தந்தையும், வன்னியசிங்கம் அவர்களின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, இரத்தினம், மகேஸ்வரி, சுவத்தினா, நேசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, பொன்னுத்துரை, இராசலிங்கம் (AMR) ஆகியோரின் மைத்துனரும், ஸ்ரெனிப் பிரகாஷ், தர்சினி, சுலக்ஸ்மன், நிரோசினி, ரொவியாஸ், நிரஞ்சினி, சன், சுகேந்திரன், நிரஞ்சனா ஆகியோரின் அன்புப் பேரனும், டிவியா, டிப்னேஸ், டிவிஷா, சயூரா, நிவிஜன், லைலா, வென், சவித் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

குமரகோட்டம், கோண்டாவில்.

**தகவல்:** குடும்பத்தினர். 077 124 8336

(CS 25234)A-1


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## எந்தவொரு...

எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கு அரசாங்கம் தயார். ஆனால், இந்தத் தேர்தல்கள் எப்போது இடம்பெறும் என்று சொல்ல முடியாது - இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவுக்கும் ஜனாதிபதி ரணிலுக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று அண்மைக்காலமாகத் தகவல்கள் வெளிவந்த வண்ணமுள்ளன. இந்த நிலையில், இது தொடர்பில் நேற்றுத் தெளிவுபடுத்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் மேலும் தெரிவித்ததாவது:-

பொதுஜன பெரமுனவுக்கும் எனக்கும் இடையிலான உறவில் விரிசல் இல்லை. எதிர்க்கட்சிகள் பரப்புரை செய்வது போன்று இது மக்களாணை இல்லாத அரசாங்கம் கிடையாது. மக்களாணையுடன்தான் இந்த அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது. ஜனாதிபதியும், பிரதமரும் மாறியிருக்கின்றார்களே அன்றி இந்த அரசாங்கத்துக்கு மக்கள் வழங்கிய ஆணை மாறவில்லை. எனவே, இல்லாத ஒன்றை திரும்பத்திரும்ப மக்கள் மத்தியில் தெரிவித்து குழப்பத்தை ஏற்படுத்தி அரசாங்கத்தை கவிழ்க்கும் எதிர்க்கட்சிகளின் நோக்கம் நிறைவேற நான் இடமளியேன் - என்றார். (அ-ம-22)

## மின்பிறப்பாக்கியைத்...

வேலணை தொலைத்தொடர்பு கோபுரமொன்றில் மின்பிறப்பாக்கியைத் திருட முற்பட்ட இரண்டு பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மின்பிறப்பாக்கியைக் கழற்றுவதற்கான போலிக்கடிதமொன்றை கைவசம் வைத்துக்கொண்டு அவர்கள் இந்தத் திருட்டு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். மின் பிறப்பாக்கி அதீத சுமைமிக்கதாக இருந்தமையால் அதை நகர்த்துவதற்காகவும் கொண்டு செல்வதற்காகவும் அவர்கள் ஜே.சி.பி. இயந்திரமொன்றின் உதவியை நாடியபோது, ஜே.சி.பி. இயந்திரத்தின் இயக்குநர், அவர்கள் மீது சந்தேகம்கொண்டு இது தொடர்பில் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளார். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் மின்பிறப்பாக்கியைத் திருட முற்பட்டவர்களைக் கைதுசெய்தனர். அத்துடன், அவர்களிடமிருந்த கடிதமும் போலியானது என்று உறுதிப்படுத்தப்பட்டது.

அவர்கள் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டதை அடுத்து சந்தேகநபர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-ம,10,26)

## 8,000...

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாணத்தில் 5 வயதுக்குட்பட்ட சிறார்களின் போஷாக்கை அதிகரிப்பதற்கான 6 மாத காலத்துக்கு சத்துமா வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட போதும் அதற்கான நிதி மூன்று மாதங்களுக்கு மட்டுமே போதுமானதாகக் காணப்படுகின்றது. எனவே மிகுதியாகக் காணப்படும் மூன்று மாதங்களுக்கு தேவையான நிதியை நாடாளுமன்ற உறுப்பினர்கள், அல்லது கிராமமட்ட பொது அமைப்புகள் வழங்க முன்வரவேண்டும் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், இ.அங்கஜன், கிளிநொச்சி மாவட்டச் செயலர், துறைசார் திணைக்கள அதிகாரிகள், மாவட்டச் செயலக அதிகாரிகள், பிரதேச செயலர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (அ-ம)

## மாணவி...

மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

7ஆம் தரத்தில் கல்வி கற்கும் 12 வயதேயான மாணவிக்கே அந்த ஆசிரியர் பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இது தொடர்பில் மாணவி தன் தாயாரிடம் முறையிட்டதையடுத்து, தாயார் அதிபரிடம் விடயத்தைத் தெரியப்படுத்தியுள்ளார். எனினும், ஆசிரியருக்கு எதிராக பாடசாலைச் சமூகத்தால் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இதையடுத்து, பொலிஸாரிடம் முறையிடப்பட்டதைத் தொடர்ந்து ஆசிரியர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார். அவர் நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (அ-ம-10,26)

## அதானியாக...

சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் கடும் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

பூநகரி, கௌதாரிமுனையில் அதானி குழுமத்தினரால் மின் உற்பத்திக்கான காற்றாலை அமைக்கும் திட்டத்துக்கு பரவலாக மக்களிடையே எதிப்புக் கிளம்பியதையடுத்து, அதுதொடர்பில் கிளிநொச்சி மாவட்டத்தின் கடந்த இரு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களிலும் ஆராயப்பட்டிருந்தன. எனினும் இது குறித்து தீர்க்கமான முடிவுகள் எட்டப்படாதிருந்தன.

இந்த நிலையில், கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின் ஒரு பகுதியாக, குறித்த காற்றாலைத் திட்டத்துக்கு அனுமதி வழங்குவதா, இல்லையா என்பது தொடர்பில் ஆராயும் விசேட கூட்டமொன்று நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன், ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு அபிவிருத்திக்குப் பொறுப்பான மேலதிக செயலாளர் எல்.இளங்கோவன், கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன், மேலதிக மாவட்டச் செயலர், பூநகரி பிரதேச செயலர், பூநகரி பிரதேசசபைச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவும், சுகாதாரத் திணைக்கள அதிகாரிகளும், பூநகரி கூட்டுறவு அமைப்புகளின் பிரதிநிதிகளும், அதானி குழுமப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது, அதானி குழுமப் பிரதிநிதிகள் மேம்போக்கான, குறைபாடுகளுடன் கூடிய திட்டமுன்மொழிவைச் சமர்ப்பித்ததால், சரியான புள்ளிவிவரங்கள், மதிப்பீடுகள் என்பவற்றை உள்ளடக்கிய முழுமையான முன்மொழிவு தேவை எனவும், அதனை ஆராய்ந்த பின்னரே அனுமதி வழங்குவது தொடர்பில் தீர்மானிக்க முடியும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவரும் கூட்டாகத் தெரிவித்தனர்.

ஆயினும், அதனைக் காதில் போட்டுக் கொள்ளாத ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா, 'சரி அப்படியானால் காற்றாலைத் திட்டத்தை முன்னெடுக்க அனுமதி வழங்குவது என்று முடிவு எடுப்போம். அதன் பின்னர் குறைபாடுகளைத் தீர்ப்போம்' என்று தன்னிச்சையாக முடிவினை அறிவித்துவிட்டு, கூட்டத்தை முடித்துக்கொண்டு வெளியேற முற்பட்டார். ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சரின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

**அமைச்சரின் முடிவுக்குக் காரணம் துப்பாக்கியா? பணமா?**

'எமது கருத்துக்களுக்கு முரணாக நீங்கள் தன்னிச்சையாக முடிவெடுப்பீர்கள் என்றால், எதற்காக இந்த ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம்? நீங்கள் தனியே முடிவெடுக்க இதுவொன்றும் கட்சிக் கூட்டமல்ல' என்று காட்டமாகக் கூறினார் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

அதற்கு, 'ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமென்றால் அதன் தலைவரான நான் எடுப்பதுதான் முடிவு' என்று அமைச்சர் டக்ளஸ் அலட்சியமாகச் சொல்ல, 'நாம் யாரும் இந்தத் திட்டத்துக்கு அனுமதி கொடுக்கக் கூடாது என்ற எண்ணத்தோடு இங்கு வரவில்லை. இன்னும் சொல்லப்போனால், அனுமதி வழங்கலாம் என்ற மனநிலையோடுதான் வந்தோம். ஆனால், இங்கு அதானி குழுமத்தினர் முன்வைத்த திட்டமுன்மொழிவில் உள்ள குறைபாடுகளைப் பார்த்த பின்னர்தான், அவற்றைச் சீராக்கிய பின்னர் அனுமதி தொடர்பில் ஆலோசிக்கும் நிலைப்பாட்டுக்கு நாம் வந்தோம். ஆனால், அமைச்சர் அனுமதி வழங்குவதில் காட்டும் அவசரத்தைப் பார்க்கும்போது, இந்த அனுமதியின் பின்னால் துப்பாக்கி விளையாடுகிறதா? அல்லது பணம் விளையாடுகிறதா? என்ற சந்தேகம் வருகின்றது' என்று அமைச்சருக்கு சுடச்சுட பதிலடி கொடுத்தார் சுமந்திரன் எம்.பி.


அந்தப் பதிலைக் கேட்டு, கோபத்தின் உச்சிக்குப்போன அமைச்சர் டக்ளஸ் உச்சஸ்தாயில் குரலை உயர்த்திப் பேச முற்பட, பதிலுக்குத் தமிழரசுக் கட்சி எம்.பி.க்களும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். நீண்டநேர வார்த்தை மோதல்களின் பின்னர், எவ்வித முடிவுகளும் எட்டப்படாமல் அந்த விசேட கூட்டம் நிறைவுக்கு வந்தது. இந்த விசேட கூட்டத்தில் மக்கள் நலனையோ, பிரதேச நலனையோ பற்றி கிஞ்சித்தும் யோசிக்காமல், அதானி குழுமத்தின் பிரதிநிதி போலவே ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரான டக்ளஸ் செயற்பட்டார் என்று கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இந்தக் கலந்துரையாடல் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன், ஜனாதிபதி செயலகத்தின் வடக்கு அபிவிருத்திக்குப் பொறுப்பான மேலதிக செயலாளர் எல்.இளங்கோவன், பூநகரி பிரதேச செயலர், பூநகரி பிரதேசசபை செயலர், துறைசார் திணைக்கள அதிகாரிகள், மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், இராணுவ உயரதிகாரிகள், மாவட்டச் செயலக மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

(அ-113,27)


# மரண அறிவித்தல்

| தோற்றம் | | இறப்பு |
| --- | --- | --- |
| 26 | | 08 |
| 11 | | 06 |
| 1951 | | 2023 |



## சோமசுந்தரம் பரமானந்தம் (துரை)

உரும்பிராய் கிழக்கு கரந்தனை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பரமானந்தம் (துரை) அவர்கள் கடந்த (08.06.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - கோமதி தம்பதியினரின் அன்பு மகனும், பொன்னையா - இரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், றமேஸ், ஜெனனி, யாழினி, சதீஸ் ( மருத்துவர் - ஆதார வைத்தியசாலை - பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும், றாகினி, றஜீந்திரன், றாஜமோகன், நாரணி (மருத்துவர் - பிரதேச வைத்தியசாலை - இளவாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், அமரர் சண்முகதாஸ், மகாலட்சுமி, தனலட்சுமி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், புனிதவதி, சற்குருநாதன், வல்லிபுரநாதன், கோகிலராணி, அமரர் சத்தியநாதன், விக்னேஸ்வரி, சத்தியதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சானுஜா, அக்ஷிகா, அஸ்வின், கிருஷ்ணிகா, ஜரீஷன், ஜதுர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2023) வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் நடைபெற்று, மு.ப 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோப்பாய் இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible]
உரும்பிராய் கிழக்கு, கரந்தன்.
தொலைபேசி - 0779464750 மனைவி
0771341264 மகன்

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25228) A-1


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## றுஷாங்கன் வெளியே ரெட்ணம் அமீன் உள்ளே!

யாழ். - கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளராக ரெட்ணம் அமீன் நேற்றுத் திங்கட்கிழமை முதல் நியமிக்கப்பட்டுள்ளார். இதுவரை காலமும் அமைச்சரின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளராக இருந்த கோ. றுஷாங்கனிடம் இருந்து, அந்தப் பதவி பறிக்கப்பட்டு, அமைச்சருக்கும் ஆளுநருக்கும் இடையிலான இணைத்தொடர்பாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(அ-1)


## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் Lanka Tile Show Room இற்கு கீழ்க்குறிப்பிட்ட பணியாளர்கள் தேவை.

- ✓ மனேஜர் - Tile Show Room ஆண் — சிங்களம், ஆங்கிலம் தெரிந்தவர்கள்
- ✓ கணக்கு பதிவாளர் - ஆண்
- ✓ பணியாளர்கள் - ஆண் 2 பேர்
- ✓ விற்பனை முகவர்கள் - Tile, Cement ஆண்

இம்மாதம் 14,15,16 ஆம் திகதிகளில் வதிவிடச் சான்றிதழ், குடும்ப அட்டைப் பிரதி, கல்வித் தகைமைச் சான்றிதழ், பிறப்பத்தாட்சிப் பத்திரம், அடையாள அட்டை பிரதி மற்றும் சான்றிதழ்களுடன் நேரில் சமுகமளிக்கவும். (CR/401227)AH-1

குருஹாட்வெயார்
இல.175, கரடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி.

## TECHNO WORLD

### தொழில்நுட்பக் கல்லூரி

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்

A / L தொழில்நுட்ப பிரிவு
புதிய கல்வியாண்டு
A/L 2025

- திகதி - 18.06.2023 (ஞாயிற்றுக்கிழமை)
- நேரம் - காலை - 8.30

(தேசிய, மாவட்ட ரீதியில் 5 ஆவது முறையாகவும் 98 மாணவர்கள் பல்கலைக்கழகதெரிவு)
(வேறு எங்கும் கிளைகள் கிடையாது)

தொடர்புகளுக்கு: 077 017 5346 (cs 25212) (N-1)

## பணியாளர்கள் தேவை

யாழ்நகரில் இயங்கும் பிரபல நிறுவனமொன்றிற்கு **கணக்காளர் (பெண்)** மற்றும் **முகாமையாளர் (ஆண்)** தேவை.

021 221 0054

## பணிப்பெண் தேவை

யாழ். நகரிலுள்ள சிறிய குடும்பம் ஒன்றிற்கு 40-55 வயதிற்குட்பட்ட தங்கி நிற்கக் கூடிய 02 பெண் வேலையாள் தேவை.

- 03,05 வயதான இரு பிள்ளைகளை பராமரிப்பதற்கு : சம்பளம் 45,000/=
- சமையல் வேலை செய்வதற்கு : சம்பளம் 40,000/=

075-4985 400, 075-988 1000, 077-9370000 (CS 25231)A-1

## தேவை

புத்தூரில் அமைந்துள்ள பூங்கனிச்சோலைக்கு பெண் உதவியாளர் தேவை. சம்பளம் நேரில்

077 382 9451, 076 639 7826

## விற்பனைக்கு

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் (மொத்தமாக) மற்றும் கடைக்குரிய றாக்கைகள் என்பன விற்பனைக்கு உண்டு.

077 673 8033, 075941 3565

## மணமகள் தேவை

1976 ஆம் ஆண்டு பிறந்த கனடாவை நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட துலாம் 3 ஆம் பாதம், சுவாதி மொத்த கிரகபாவம் 70, செவ்வாய்க்குற்றமுள்ள (7). (V) மணமகனுக்கு மணமகள் தேவை. (பதிவுத்திருமணமாகி விவாகரத்துப் பெற்றவராவார்)

077 329 4976

## பணியாளர்கள் தேவை

- தொழில் பயிலுநர்கள்
- கணக்குப் பதியுநர்கள்
- விற்பனைப் பிரதிநிதிகள்

ஆண் / பெண்

076 315 6470

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு.

* கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 1/2 km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200 m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி).
* கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் (250,000/=) மட்டும்.

தொடர்பு: 076 739 0413
076 4365 814

## காணி விற்பனைக்கு உண்டு

* யாழ்ப்பாணம் புத்தூரில் 44 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.

தொடர்பு: 076 7336 047, 076 7558 606


## மரண அறிவித்தல்



### திருமதி சரஸ்வதி குணலிங்கம்

புங்குடுதீவு 06 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்திச் சந்தியை வதிவிடமாவும் கொண்ட திருமதி சரஸ்வதி குணலிங்கம் கடந்த (12.06.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், முத்தம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குணலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், அனுஜா (பிரான்ஸ்), சுகந்தினி (கனடா), கலைமதி (பிரான்ஸ்), குமுதா (யாழ்ப்பாணம்), சபேசன் (குணலிங்கம் பல்பொருள் வாணிபம் - ஆனைப்பந்திச் சந்தி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நவராசா (பிரான்ஸ்), திலீபன் (கனடா), கலைச்செல்வன் (பிரான்ஸ்), கிருஸ்ணரூபன் (யாழ்ப்பாணம்), பவிதா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற செல்லத்துரை, பாலசுந்தரம் (இந்தியா), காலஞ்சென்றவர்களான நல்லதம்பி, பொன்ராஜ், கந்தசாமி, இரத்தினராசா மற்றும் இரட்ணகோபால் (லண்டன்), காலஞ்சென்ற யோகாம்பிகை மற்றும் கமலாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கோமளம், கமலேஸ்வரி, மகேஸ்வரி, கிறிஸ்ரபெல், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் வசந்தா, திருமலர், சிவநேசன் காலஞ்சென்ற சோதிலிங்கம் மற்றும் சண்முகநாதன், காலஞ்சென்றவர்களான கோமளாராணி கந்தசாமி, ஜெயராணி மற்றும் ஞானசவுந்தரி, காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் வரதலெட்சுமி, மகாதேவன் ஆகியோரின் மைத்துனியும், ராகவி, காவ்யா, செருந்தி, எழிலி, பொழிலன், இனியன், பிரமி, வைணவி, கஜய், சாயினிதா, சைமிரா, தீப்பிகா, தன்ஷிகா, அஸ்விகா, அபிஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2023) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு முற்பகல் 10.00 மணிக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
சபேசன் (மகன்)
கிருஸ்ணரூபன் (மருமகன்)

குணலிங்கம் பல்பொருள் வாணிபம்
இல.298, நாவலர் வீதி,
ஆனைப்பந்திச் சந்தி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

தோற்றம்
02 . 10 . 1954

மறைவு
11 . 06 . 2023



### இராசதுரை தவமணி

யாழ்ப்பாணம் காரைக்கால் வீதி இணுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசதுரை தவமணி கடந்த (11.06.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சீனியர் கனகம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற துரை லக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும், இராஜேஸ்வரி, ரமேஸ், கீர்த்தனா ஆகியோரின் அன்புத் தாயாரும், குலசிங்கம், கேதா, சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி, நவரத்தினம், சறோசாதேவி, ரஞ்சினிதேவி, ஞானசந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற குணபாலசிங்கம், பாக்கியம், வசந்தராணி, ஈஸ்வரி, சகுந்தலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2023) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணிக்கு காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
(CS50826)N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.